Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 18 புதன்கிழமை (03.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 337

## காணாமற்போனோர் குறித்து தனியான விசாரணைக்கு திட்டம்

### ஜனாதிபதி ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

காணாமற்போனோர் தொடர்பாக தனியான விசாரணையொன்றை நடாத்தவும் ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது இது தொடர்பாக ஆணைக குழுவின் செயலாளர் குணதாச தெரிவித்துள்ளதாவது,

காணாமற்போனோர் தொடர்பாக் சாட்சியங்களைப் பதிவு செய்யச் செல்லும் இடங்களில் தமது உறவுகள் தொழிலுக்குச் செல்லும்போது காணாமற் போனார்கள், கடலுக்குப் போகும போது காணாமற் போனார்கள், அவர்கள் காணாமற் போனமைக்கு இன்னார்தான் காரணம் என முறைப்பாடுகளை முன் வைக்கின்றனர். இவ்வாறு முன் வைக்கும் முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளை நடத்தத் தீர்மானித்துள்ளோம். இதற்காக விசேட குழுவொன்றும் அமைக்கப்பட உள்ளது.

ஆணைக்குழுவின் சாட்சியங்களை பதிவுசெய்யும் நடவடிக்கைக்கு சமாந்தரமாக இந்த விசாரணை செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன.


அதேநேரம், எதிர் வரும் 27,28,29,30ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் சாட்சியங்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாய்லாந்து தடுப்பகத்தில் இலங்கையர்களும் அடக்கம்

தாய்லாந்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான அகதிகளில் இலங்கையர்களும் உள்ளனரென சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து கண்காணிப்பகம் தெரிவித்துள்ளதாவது, தாய்லாந்தின் தடுப்பு முகாம்களில் ஆயிரக்கணக்கானவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர். இந்த முகாம்களில் சிறுவர் உரிமைகள் மீறப்படுகின்றன. அவர்களுடைய நலன்களுக்கு ஆபத்துள்ளது. குடியேற்றவாசிகளும் அவர்களின் குழந்தைகளும் அவசியமற்ற விதத்தில் வசதிகளற்ற தடுப்பு முகாம்களிலும், பொலிஸ் தடுப்பிலும் வைக்கப்பட்டுள்ளனர். எனவே இதுகுறித்து சர்வதேச அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் பிரதிநிதி அல்ல



### பழ.நெடுமாறன் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏற்றுக் கொள்ள முடியாதென தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக பா.ஜ.க. தலைவர்கள் இரட்டை வேடம் போடுகின்றனர்.

அண்மையில் இந்தியா வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒருங்கிணைந்த இலங்கைக்குள்தான் தீர்வு கேட்கிறோம் என்கிறார். ஆனால், நீங்களோ தனி ஈழம் தான் தீர்வு என்கிறீர்களே என்று கேட்டபோது,

ஈழத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை ஈழத் தமிழர், புலம்பெயர்ந்த தமிழர் ஆகியோரிடம் பொது வாக்கெடுப்பு நடத்தித்தான் முடிவு செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்ல. அவர்களிடையே வேறுபட்ட கருத்துகள் உள்ளன.

வடக்கு மாகாணத்துக்கு தேர்தல் நடந்து 2 ஆண்டுகள் ஆன பின்னரும் இதுவரை எந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை அனுமதிக்கு பணஅறவீடு; அதிபர், உபஅதிபர் இடமாற்றம்

மாணவர் ஒருவரை பாடசாலையில் இணைப்பதற்கு பணம் வாங்கினார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ள அதிபர், உப அதிபர் ஆகியோருக்கு எதிராக வடக்கு மாகாண கல்வித் திணைகளம் நடவடிக்கை எடுத்துள்ளது. வவுனியா நகருக்கு அண்மையில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றில் தமது பிள்ளையை சேர்க்கச் சென்ற பெற்றோரிடம் பணம் அறவிடப்பட்டுள்ளது. இது தொடரபில் பாதிக்கப்பட்ட பெற்றோர், குறித்த பாடசாலை அதிபர், உப அதிபர் ஆகியோருக்கு எதிராக வடமாகாணக் கல்வித் திணைக் களத்தில் முறைப்பாடு செய்தி

19 ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா.விசாரணைகளுக்கு எதிர்ப்பு முன்னாள் இராணுவ வீரர் தீக்குளிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஐ.நா.சபையின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஓய்வு பெற்ற இராணுவ வீரர் ஒருவர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக தனக்குத்தானே தீ மூட்டி எரிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த 60 வயதான நபர் நேற்றையதினம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் தனக்குத்தானே தீ மூட்டியதை அடுத்து

பொலிஸ் நிலையத்தில் இருந்தவர்கள், கொழும்பு மாநகர சபை தீ அணைக்கும் பிரிவினருக்கு உடனடியாக அறிவித்ததையடுத்து தண்ணீர் பௌசர்களுடன் விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயை அணைத்துள்ளனர்.

இருந்த போதிலும், குறித்த நபரின் உடலின் 75 வீதமான பகுதியில் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

தீ வைத்து கொண்ட நபர், ஓய்வு பெற்ற இராணுவ வீரர் என்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரச ஊழியரின் சம்பளத்தை 40 வீதத்தால் அதிகரிக்க வேண்டும்

### தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 40 வீதத்தால் அதிகரிக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அந்தக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளதாகக் கூறுகின்றனர். எனினும் என்ன நடந்துள்ளது என்பது எமக்குப் புரிவதில்லை. மிதக்கும் கொழும்பில் உள்ள கடைகளில் ஒரு அப்பம் 200 ரூபாவாகும். 200 ரூபா கொடுத்து அப்பம் சாப்பிடுவோர் இந்த நாட்டில் உள்ளனர். 200 ரூபாவிற்கு அப்பம் சாப்பிடுவோர இங்கு உள்ளபோது பதுளை மாவட்டத்தில் ரிதிமாலியத்த பகுதி மக்களுக்கு ஒருவேளை சாப்பிடவும் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரச நிறுவனங்க

19 ஆம் பக்கம் பார்க்க

## வர்ணப்பூச்சிற்கு சென்ற குடும்பஸ்தரைக் காணவில்லை

யாழ், மந்துவில் கொடிகாமப் பகுதியைச் சேர்ந்த சண்முகநாதன் ஜெயரத்தினம் (வயது-31) என்ற குடும்பஸ்தரை காணவில்லையென அவரது மனைவி ஜெயரத்தினம் மாலினி, நேற்று முன்தினம் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 21ஆம் திகதி, பளையிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு வர்ணப்பூச்சு வேலைக்காகச் சென்ற அவர், இதுவரையில் வீடு திரும்பவில்லை எனவும். அவருடனான எந்தவித

19 ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமை ஆணையராக புதியவர் கொள்கையில் மாற்றம் வராது என்கிறது ஐ.தே.க.

ஐ. நா. மனித உரிமை ஆணையாளராக புதியவர் நியமிக்கப்பட்டுள்ளதால் மனித உரிமை ஆணையகத்தின் இலங்கை தொடர்பான கொள்கையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களுக்கு நேற்றையதினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் புதிய அரசாங்கம் அல்லது அமைச்சர் பதவியேற்கும் போது கொள்கை மாற்றங்கள் நிகழ்வது போன்று சர்வதேச அளவில் நடைபெறுவதில்லை. இதுவே ஐ.தே.க.வின

19 ஆம் பக்கம் பார்க்க

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

# ஸ்கந்தபுரத்திலும் 'உதவும் கரங்கள்' 54 குடும்பங்களுக்கு கடன் உதவி

வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் ஸ்கந்தபுரம் சமூக மைய வங்கியினால் (சஹண அருண) 'உதவும் கரங்கள்' கடன் திட்டத்தின் கீழ் 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா கடன் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட இக் கடன் திட்டம் ஸ்கந்தபுரம் வலயத்தைச் சேர்ந்த வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் கோணாவில் உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவு களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 54 பயனாளிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், 3 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் வீதம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கி வைக்கப்பட்டது. (69)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மழலைகளுக்கான 'ஊக்கி' என்ற நூல் ஒன்று நாளை வெளியிடப்படவுள்ளது.

செல்வி.ம.கனிந்தினியினால் படைக்கப்பட்ட இந்த நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 3.30 மணியளவில் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய மண்படத்தில் வெளியிடப்படவுள்ளது.


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3800)


# நீதிமன்றம் செல்ல பொலிஸ் பாதுகாப்பு

## கோருகிறார் அனந்தி




கைது செய்யப்பட்டவர்களை வெளிக்கொண்டு வருவது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு தொடர்பான விசாரணைகளின் போது முல்லைத்தீவு நீதிமன்றம் சென்று வருவதற்கான பொலிஸ் பாதுகாப்பு பெற்றுத் தரும்படி வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் முல்லைத்தீவு நீதிமன்ற நீதவானிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலைத் தெவித்தார்.

ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தவர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கமும் அதற்கு ஆதரவாய் இயங்கிக் கொண்டிருப்பவர்கள் சிலரும் மேற்கொண்ட திட்டமிட்ட சதியாகவே இந்த ஆர்ப்பாட்டத்தைக் கருதுகிறோம்.

படையினரது தேவிபுரம் பண்ணையில் வேலை செய்பவர்களை வைத்தே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருந்ததாக தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று முற்பகல் இந்த மீனவர்களை யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களம் என அதிகாரிகளினால் நீதிமன்றில் முற்படுத்தியபோதே ஊர்காவற்றுறை நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது. இதேவேளை, மற்றுமொரு சம்பவத்தில் நேற்றுக் காலை படகு உடைந்த நிலையில் கடலில் தத்தளித்த 6 இந்தியா மீனவர்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர். (பா)

# குடாநாட்டில் நாய்க்கடி என்றுமில்லாதவாறு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாய்க்கடிக்கு இலக்காகியவர்கள் 65 பேர் வரை தினமும் யாழ்.போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் அமைந்துள்ள விலங்குவிசர் நோய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைவிட தினமும் பதினைந்து பேர் வரை நாய்க்கடிக்கு இலக்காகி புதிதாக சிகிச்சை பெற்று வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் 24 ஆம் இலக்க விபத்துச் சேவைப் பிரிவில் நாய்க்கடிக்கு இலக்காகியவர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது.

இவ்வாறு சிகிச்சை வழங்கப்படுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல் மற்றும் நோயாளரின் அசௌகரியம் காரணமாக தனியான சிகிச்சைப் பிரிவு யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (பா)

# டெங்கு அபாயம் இன்னும் நீடிக்கிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட் மாதம் யாழ். போதனா வைத்தியசாலையில் டெங்குத் தொற்றுக்கு இலக்காகிய 54 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக அவ் வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வாரம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் எட்டுப் பேரும் இவ்வாறு டெங்கு நோய்த் தாக்கத்துக்கு இலக்காகி அனுமதிக்கப்பட்டவர்களில் அடங்குவதாகவும் தெரிவித்த அந்த அதிகாரி நேற்றும் கோப்பாய் பகுதியில் இருந்து பல்கலைக்கழக மாணவன் ஒருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் பெய்த மழை காரணமாகவும் தென்பகுதிக்குச் சென்று திரும்புபவர்கள் மூலமாகவும் இவ்வாறு டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# தீயில் கருகிய குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் ஊற்றி தீ பற்றவைத்து எரிகாயங்களுக்கு இலக்காகிய குடும்பப் பெண் ஒருவர் 40 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கேப்பாப்பிலவு, முள்ளியவளையைச் சேர்ந்த இராஜரட்ணம் ராஜினி (வயது-24) என்ற நான்கு மாதக் கர்ப்பிணியே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, குறித்த பெண் ஏற்கனவே மணம் முடித்து யுத்த காலத்தின் போது கணவரை இழந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர் இராஜரட்ணம் என்பவரை மணம் முடித்து வாழ்ந்து வந்த நிலையில் கணவன் தினமும் குடித்துவிட்டு வந்து அவரை அடிப்பதாகவும் இவ்வாறு அவர்கள் இருவருக்கிடையேயும் பிரச்சினைகள் தோன்றுவதாகவும் சம்பவ தினம் கணவன், மனைவி இருவருக்குமிடையில் சண்டை நடைபெற்ற போது மனைவி மண்ணெண்ணெய்யை எடுத்து தனது உடலில் ஊற்றி கணவனை மிரட்டியதாகவும் ஆனால் மிரளாத கணவன் தீக் குச்சியைப் பற்ற வைத்து மனைவியை எரியூட்டியதாகவும் விசாரணையின் மூலம் தெரியவந்திருப்பதாக திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் தெரிவித்துள்ளார். (பா)

# பொலிகை விநாயகருக்கு மஹோற்சவம் ஆரம்பம்

பொலிகண்டி இலுப்பைமூலை உப்புக்கிணற்றடி அருள்மிகு சித்திவிநாயகப் பெருமானுக்கு ஐந்தொழில்களைக் குறிக்கும் மஹோற்சவம் கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 6 ஆம் உற்சவம் வேட்டைத்திருவிழாவும், 7 ஆம் திகதி 8 ஆம் உற்சவம் சப்பறத்திருவிழாவும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை 9 ஆம் உற்சவம் தேர்த்திருவிழாவும் 9ஆம் திகதி 10 ஆம் உற்சவம் தீர்த்தத்திருவிழாவும் அன்றையதினம் இரவு கொடியிறக்க உற்சவமும் இடம்பெற்று 11 ஆம் திகதி மாலை பூங்காவனத்திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவடையவுள்ளது. (116)


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **1088**

திகதி **01.09.2014**

வெற்றி எண்கள்: **08 14 22 29** ஆங்கில எழுத்து: **L**

**ஜக்பொட் பரிசு ரூ. 3,77,44,600/= வெல்லப்படவில்லை**

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,77,44,600/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 4,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 266 | 1,000/= | ரூ. 2,66,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 464 | 1,000/= | ரூ. 4,64,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12030 | 60/= | ரூ. 7,21,800/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6314 | 40/= | ரூ. 2,52,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 157939 | 20/= | ரூ. 31,58,780/= |
| ஆங்கில எழுத்து | 22936 | 20/= | ரூ. 4,58,720/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 67,71,860/=

**எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்**
**ரூபா. 38,053,500/=**

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.09.04 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3797)






கிளிநொச்சி, இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் வானிலை ஆய்வு நிலையம், விவசாய நோயியல் சிகிச்சை நிலையம், ஊழியர் விடுதி ஆகியன நேற்றுத் திறந்து வைக்கப்பட்டன.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் மேலதிக பணிப்பாளர் கலாநிதி அரசகேசரி தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் விவசாய பணிப்பாளர் நாயகம் கலாநிதி றொகான் விஜயகோன், கிளி. மேலதிக அ.அதிபர் ஸ்ரீனிவாசன், விவசாயப் பணிப்பாளர் எம்.டபிள்யு வீரகோன் திணைக்கள உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (29)

# கட்டுடை அரசடிப் பகுதியில் உவராக மாறியுள்ள கிணறுகள்

## மக்கள் குடிநீரின்றி தவிப்பு

கட்டுடை அரசடி வீதியிலுள்ள மாதா கோவிலடிப் பகுதி கிணறுகளில் உள்ள நீர் உவராக மாறியுள்ளதால் இப்பிரதேச மக்கள் குடிநீரின்றி பல சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் கிணறுகளும் பொதுக்கிணறுகளும் தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் நீர் உவராகி காணப்படுவதாகவும் இதனால் நீரைப்பெறுவதற்கு மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் குடிநீரை பெறுவது பெரும் சவாலாக இருப்பதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இப்பிரதேசத்திற்கு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் குடிநீர் விநியோகிக்கப் படுகின்ற போதிலும் அவை போதுமானதாக இல்லை எனவும் மக்கள் தெரிவிகின்றனர்.

குடிநீர் தேவை என்பது மிக அவசியமானதாக இருக்கின்ற நிலையில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை வறட்சியான காலப் பகுதியிலாவது போதியளவு குடிநீரை விநியோகம் செய்ய ஆவன செய்ய வேண்டும் என இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அராலி கிழக்கு மெய்ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

அதிகாலை 5.30 மணியளவில் தீபாராதனை பூசைகளும், 9.30 மணி தொடக்கம் கும்ப பூசை, அபிஷேக பூசையுடன் பூர்த்தியாகி யாழ்போதனா வைத்தியசாலை முன்னாள் பிரதம மேற்பார்வையாளர் கு.கைலாசபிள்ளையின் சொற்பொழிவு தொடர்ந்து நடைபெறும். மாலை 5.30 மணிக்கு பஜனை ஆரம்பமாகி 6.30 மணிக்கு தீப பூசையுடன் யாவும் நிறைவு பெறும்

1 தொடக்கம் 10 வரையான உபயகாரர்களும் அடியவர்களும் சேர்ந்து செய்யும் பூசை எதிர்வரும் 13 ஆம் திகதி 108 சங்கு வைத்து சங்காபிஷேக பூசை நடைபெற்று மகேஸ்வர பூசையும் ஆரம்பமாகும். சாயந்தர தீபாராதனைப் பூசையுடனும் எப்பெருமானுடையபக்திப்பாடல்களுடனும் யாவும் நிறைவுறும்.

# வருடாந்த மஹோற்சவம்

(வேலணை)

வேலணை வடக்கு இலந்தை வளப்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு 9 மணிக்கு தீ மிதிப்பும் இடம்பெறும்.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு சப்பறமும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.


# வர்த்தக சங்கம் உருவாக்கம்

(வலிகாமம்)

வலிகாமம் தெற்கு பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள வியாபார நிலைய உரிமையாளர்களின் வர்த்தகர் சங்கம் அமைக்கப்பட்டது. வர்த்தகர் சங்கம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் ஏற்பாடு செய்திருந்தார்.


வலி.தெற்கு பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இந்த வர்த்தகர் சங்கத்தின் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வலி.தெற்கு பிரதேச வர்த்தகர் சங்கத்தின் தலைவராக வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக மருதனார்மடம் கஜமுகன் களஞ்சிய உரிமையாளர் ச.யோகராசாவும், பொருளாளராக சுன்னாகம் திருக்குமரன் ஹாட்வெயர் உரிமையாளர் ப.குணரத்தினமும் உபதலைவராக றொ.தவச்செல்வமும், உபசெயலாளராக ராஜ்குமாரும், நிர்வாகசபை உறுப்பினர்களாக சி.சிதம்பரநாதன், ஜெயரூபன், கனகராஜா, க.நிஷாந்தன், தி.சிவபாதசுப்பிரமணியம், இ.சுதர்சன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சங்கத்தின் கணக்காய்வாளராக வலி. தெற்கு பிரதேச சபையின் செயலாளர் தி.தியாகச்சந்திரனும், போஷகராக வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (48)



நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் கம்பராமாயண இசை பேருரைப் பூர்த்தி நாளில் சர்மாவைப் பாராட்டி தெய்வத்தமிழ்ச் சுடர் இராசையா ஸ்ரீதரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம்.

# சிவில் சமூகமும் சமூக சிற்பிகளும் கள்ள மௌனமும்




தேர்தல் காலத்தில் அறிக்கைகளை விடுவதற்கென்று ஒரு கூட்டம் இருக்கிறது. இந்தக் கூட்டத்திற்கும் சமூகத்திற்கும் இடையில் நெருக்கமான உறவு இருப்பதில்லை.

குறைந்தபட்சம் ஒரு நல்ல தொடர்பாடல் கூட இந்தக் கூட்டத்திற்கும் மக்களுக்கும் இடையில் கிடையாது.

அது மட்டுமல்ல, யதார்த்தத்திற்கும் நடைமுறைக்கும் கூட சிறு துளியளவு உறவு கிடையாது. முற்று முழுதாகக் கற்பனை உலகத்திலே மிதந்து கொள்கின்ற இவர்கள், மக்களுக்காக ஒரு சிறு உதவியைக் கூட சேவை மனத்தோடும் தியாக சிந்தையோடும் செய்வதில்லை.

பதிலாகத் தம்மை புத்திஜீவிகள், ஆய்வாளர்கள், மேலாளர்கள், வழிகாட்டிகள், சிந்தனைச் சிற்பிகள் எனக் கருதிக்கொண்டு ஒட்டுமொத்த சமூகத்தின் கருதுகோள்களாக தமது கருத்தையே நிறுவ இவர்கள் முயற்சிப்பதுண்டு.

மக்களுடைய வாழ்வின் நெருக்கடிகளிலோ, அவர்களுடைய விடுதலைப் போராட்டத்திலோ நேரடிப் பங்கை வகிக்காமல் தமது வாழ்வையும், அந்தஸ்தையும், பேணி தம்மை வளர்த்துக்கொள்ளும் இவர்கள் அந்த மக்களுக்கு உத்வ ஒருபோதும் தயாராக இருப்பதில்லை.

அதேவேளை அந்த மக்களை ஆண்டு நடத்த முயற்சிக்கின்றார்கள். தங்களுடைய ஆதிக்க சிந்தனையை பாதிக்கப்பட்ட மக்களின் மீது பிரயோகிக்க முனைகிறார்கள். இதற்கு அவர்கள் கூறுகின்ற நியாயம் வேடிக்கையானது.

படித்த, சிந்திக்கத் தெரிந்த புத்திஜீவிகளாகிய தாமே சமூகத்தை வழிநடத்துவதற்குப் பொறுப்பானவர்கள், அந்தக் கடமை தமக்கே உண்டு. ஆகவே ஒட்டுமொத்த சமூகத்திற்காக தாமே சிந்திக்கின்றோம் என்று தம்மைத்தாமே பிரகடனம் செய்துகொள்வார்கள்.

இவர்கள் கடுந்தேசியவாதம் பேசுவார்கள். ஆனால், அவர்கள் பேசுகின்ற தேசியத்திற்காக ஒரு பொழுதையேனும் தங்கள் வாழ்வில் அர்ப்பணிக்கத் தயாராவதில்லை. தங்கள் குடும்பத்தையோ தங்களின் பிள்ளைகளையோ தாம் வலியுறுத்துகின்ற தேசியத்திற்காக உழைக்க இவர்கள் அனுமதிப்பதுமில்லை.

ஆகவே நடைமுறையில் இவர்கள் போலித் தேசியவாதிகளாகவும், சொந்த இனத்தையே ஏமாற்றுவோராகவும், நடிப்புச் சுதேசிகளாகவும், ஆதிக்கவாதிகளாகவும் உள்ளனர்.

உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாறாகவும், முதலுதவி தேவைப்படும் மக்களுக்கு எதிராகவும் செயற்படுகிறார்கள்.

இல்லையென்றால், தேர்தற்காலத்தில் மக்களை தமிழ்த்தேசியத்திற்காக அணி திரளுமாறு கோரிக்கை விடும் புத்திஜீவிகளும் சமூக சிற்பிகளும் பல்கலைக்கழக சமூகத்தினரும் மதகுருமாரும் தற்போது வடபகுதியில் நடக்கும் அரசியற்கூத்துக்களை மற்றும் தீர்வு தொடர்பான அசமந்தப் போக்கை கண்டும் காணாமலும் கள்ளத்தனமாக இருப்பது ஏன்?

மக்களுடைய வாக்குகளை தந்திரமாக கொள்ளையடித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் காலடியில் குவித்த இவர்கள் அந்த மக்களுடைய நம்பிக்கைக்கு மாறாக கூட்டமைப்பினர் ஏமாற்றாய் நடந்துகொள்வதையிட்டு பேசாது இருப்பது ஏன்?

மட்டுமல்ல, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள பிரதேச சபைகள், நகரசபைகள் மாகாணசபை போன்றவை சீரழிந்த நிலையில் செயற்படாதவையாக உள்ளதைக் கண்டும் மௌனம் காப்பது ஏன்?

முதலுதவி தேவைப்படும் நிலையிலிருக்கும் பாதிக்கப்பட்ட சமூகத்தின் தேவைகளையும், எதிர்காலத்தையும் சிந்திக்காமல் இனவாத ரீதியில் ஆதிக்க சக்திகளை மேலோங்கச் செய்யும் அகங்காரம் ஒருபோதும் நீதியானதுமல்ல. ஜனநாயகத்தை அடித்தளமாக கொண்டதுமல்ல. அறிவுஜீவித்தனமானதுமல்ல.

எனவேதான் தமிழ் மக்கள் ஒற்றுமையாக எத்தனையோ தடவைகள் தமிழ் அடையாளத்திற்காக வாக்களித்த போதும் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. மாறாக, தலைவர்கள் மட்டுமே வெற்றிபெறுகிறார்கள்.

வெற்றி பெற்றுக்கொண்டவர்கள், மக்கள் எதிர்பார்ப்புகளுக்கு முரணாக தங்களுக்குள் பிடுங்குப்பட்டுக் கோமாளிக்கூத்துக்கள் ஆடியும், முந்திய தேர்தலில் வாக்குறுதியளித்த எதையும் செய்யாமல் காலத்தைக் கடத்திவிட்டு அடுத்த தேர்தலில் வந்துநிற்கும் போதும் நமக்குத்தானே மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று திமிர்த்தனத்தோடு நடந்துகொள்கையிலும், இவர்களை வெல்லவைத்த புத்திஜீவிச் சமூகத்தினர் என்ன செய்கிறார்கள்?

ஒவ்வொரு தேர்தலின் பிறகும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பவர்கள் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, இந்த புத்திஜீவிச் சமூகத்தினர் என்று சொல்லிக்கொள்ளும் வெறும் பேச்சுச் சுயநலவாதிகளும்தான்!

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகல வெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது. - பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கேள்விகள் கேட்காமல் வாழ்வில்லை!

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சின்னச் சின்ன மாற்றங்களினால் இன்றைய மனிதர்களாக உருவாகி வந்தவர்கள் நாம்.

மனிதன் தோன்றிய வரலாற்றில் உழைப்புக்கு பெரும் பாத்திரம் இருக்கிறது. நான்கு கால்களால் நடந்து கொண்டிருந்த மனிதக்குரங்குகள் கைகளை உயர்த்தி விரல்களைப் பயன்படுத்த ஆரம்பித்தபோது மூளையின் வளர்ச்சியில் ஒரு பெரும்பாய்ச்சல் நிகழ்ந்தது என்று படித்திருக்கிறோம்.

அதுபோலவே நமது வளர்ச்சியில் நடந்துவந்த ஒவ்வொரு மாற்றத்துக்கும் பின்னால் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகள் இருந்திருக்கிறது. இந்தக் கேள்விகள் தான் இன்று மனித குலம் அறிவியல், இலக்கியம், கலை, தத்துவம், அரசியல், தொழில்நுட்பம் என்று சகலவிதமான துறைகளிலும் பிரம்மாண்டமான வளர்ச்சியடைய அடிப்படைக் காரணம்.

சமூக மாற்றங்களைத் தூண்டியதும், மாற்றங்களைக் கொண்டு வந்ததும் இந்தக் கேள்விகள் தான். இந்த உலகத்தைப் புரிந்து கொள்ளும் முயற்சியிலேயே கேள்விகள் பிறக்கின்றன.

அநேகமாக மூன்று வயதிலிருந்தே குழந்தைகள் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள். முதலில் தாயிடம், தந்தையிடம், பின்னர் எல்லோரிடமும் கேள்விகள் கேட்கத் தொடங்குகிறார்கள். அது என்ன? இது என்ன? என்று கேள்விகளால் திணறடிக்கிறார்கள் குழந்தைகள்.

பெற்றோர் முதலில் நம்முடைய குழந்தை இப்படிக் கேள்வி கேட்கிறதே என்று ஆனந்தப் படுகிறார்கள். பெரிய அறிவாளியாய் வருவான் என்று தங்களிடையேயும் பிறகு மற்றவர்களிடமும் சொல்லி மகிழ்கிறார்கள்.

ஆனால் கேள்விகள் அதிகரித்துப் பதில் சொல்லத் திணறும் போது அல்லது தெரியாமல் போகும்போது சலிப்புற்று குழந்தைகளைத் திட்டவும் செய்வார்கள். பெரியவர்களின் அறியாமையை குழந்தைகள் அறிந்து கொள்ளக் கூடாது என்று வரட்டுக் கௌரவம் தான் காரணம்.

பல குடும்பங்களில் குழந்தைகள் பேச ஆரம்பித்தவுடனேயே நேஸரியில் கொண்டு போய் சேர்த்து விடுவார்கள். எப்போதும் ஓட்டமும் விளையாட்டும் கேள்விகளுமாய் இருக்கிற குழந்தைகளை அங்கே கையில் அடக்கி ஒடுக்கி உட்காரவைத்து விடுவார்கள். அதில் இருண்டு ஒளியிழந்து போகிற குழந்தைகள் கடைசி வரை அந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதில்லை.

போகப்போக தண்டனைகளாலும், ஆசிரியர்கள் சொல்லித் தருவதைத் திரும்பச் சொல்கிற கிளிப்பிள்ளைகளாகவும் வளர்க்கப்படும் அவர்களுக்குப் பள்ளிக்கூடம் என்றாலே பயந்து நடுங்குகிற அளவுக்கு நம்முடைய கல்வி முறையும் அமைந்துள்ளது.

கல்வி மனப்பாடக்கல்வியாக, பரீட்சைகள், புள்ளிகள் மூலமாக ஒரு குழந்தையின் திறமையைத் தீர்மானிக்கிற கல்வியாக இருக்கிறது. ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதை, அல்லது புத்தகத்தில் உள்ளதை அப்படியே சொல்பவன் அல்லது எழுதுபவன் சிறந்த மாணவன்/மாணவி.

கேள்விகள் கேட்க விருப்பப்படாத ஒரு சமூகமாகவே நாம் தோற்றமளிக்கிறோம். பழகிய பாதையில், பழைய அதே சிந்தனைகளில், மாற்றங்களை யோசிக்காத ஒரே போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறோம்.

நிலப்பிரபுத்துவ கால ரோசங்களுடனேயே இன்றும் பயணிக்கிறோம். அதனாலேயே நமது இன்றைய வாழ்வையும் நல்லபடியாக மாற்றிக்கொள்ள முடியாமல் தொடர்ந்து வதங்குகிறோம்.

நமக்கு முன்னால் வீசப்பட்டுக் கொண்டிருக்கும் ரோசங்கள், வீரங்கள், ஆண்டபரம்பரைப் பெருமிதங்கள், அப்புக்காத்து வாதங்கள், வெறுப்புகள், பகையேற்றும் ஆவேசங்கள், வாய்ச்சவடால்கள் எல்லாவற்றையும் நிறுத்தி, நடக்கக் கூடியது என்ன என்ற நிலையிலிருந்து அதற்கான கேள்விகளைக் கேட்காமல் நமக்கு விடுதலையுமில்லை; ஒளிமிக்க வாழ்வுமில்லை என்பதைப் புரிந்துகொள்வோம்.

- ஆசிரியர்.

# பிரிவினையை ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை

## - அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகிறார் -

(கொழும்பு)

இலங்கைக்குள் பிரிவினைய்யை ஏற்படுத்த இந்தியா முயற்சிக்குமாயின் அதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தின் அடித்தளம் ஆகும்.

இலங்கையில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை சர்வதேச அளவில் கொண்டு சென்றபோதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலக்கு என்னவென்பது வெளிப்பட்டு விட்டது.

இந்நிலையில் சுய உரிமைகள், தனி அதிகாரங்கள் என்ற பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்படுவது தனி தமிழீழத்தினை உருவாக்குவதற்காகவே. கூட்டமைப்பின் இந்த நோக்கம் என்னவென்பதை தெளிவாக புரிந்து கொண்ட இந்தியாவின் புதிய அரசாங்கமும் இவர்களுக்கு துணை போகும் வகையில் செயற்படுவது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

இந்தியாவுடன் அரசாங்கம் நல்ல உறவு முறையினை பேணுகின்றது. இந்தியா இலங்கை அரசுடன் உண்மையாக செயறபடுகின்ற நம்பிக்கையும் எமக்கு உள்ளது. எனவே, இதனை தொடர்ச்சியாக நல்ல முறையில் மேற்கொள்வோம்.

மேலும், இந்தியாவின் முன்னைய அரசாங்கத்தின் உதவியுடனேயே இலங்கையில் பிரபாகரனினால் பயங்கரவாத அமைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு துணைபோகும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் செயற்பட்டது தற்போது புலிப்பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டாலும் கூட்டமைப்பின் பயங்கரவாத நடவடிக்கைகள் செயற்பட்டுக் கொண்டே உள்ளது. என்றார்.

# ஊவா மாகாணசபை வெற்றியை கொச்சைப்படுத்தும் எதிர்க்கட்சிகள்

## - கூறுகிறார் அமைச்சர் ஜோன்செனவிரத்ன

ஊவா மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு கிடைப்பது வெற்றியல்ல மாபெரும் வெற்றியாகும். இந்த வெற்றியை கொச்சைப்படுத்தவே எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன மொனராகலையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில், இன்று மொனராகலையில் வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டிருப்பது ஐக்கிய தேசியக கட்சியினரும் மக்கள் விடுதலை முன்னணியினருமதான். இவர்கள் அன்று வாக்காளர்களின் கைகளை வெட்டியும், தலைகளை துண்டித்தும் சந்திகளில் தொங்க விட்ட சம்பவங்களையும் செய்த அட்டூழியங்களையும்,இன்று மறந்து விட்டனர்.

தேர்தல் வன்முறைகளை இல்லாமல் செய்ததே எமது இன்றைய அரசு தான். கிராமங்களுக்கு சேவைகள் செய்த எமக்கு வன்முறைகளை காட்டி வாக்குகளை பெற வேண்டிய தேவையில்லை. எத்தகைய அச்சுறுத்தல்கள் வந்த போதிலும் மக்கள எமக்கு வாக்களிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எனவே ஊவா மாகாண வெற்றியை மாபெரும் வெற்றியாக்குவீர்கள் என்று நாம் முழு மனதுடன் நம்புகிறோம் என்றார்.

# வரையறைக்கு செலவுசெய்யும் சமூகமாக வாழவேண்டும்

## - அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு -

நாங்கள் திட்டமிட்ட ஒரு சமூகமாக, வரையறைக்குள் செலவு செய்கின்ற சமூகமாக, கிடைக்கின்ற வருமானங்களுக்குள் வாழ்ந்து காட்டுகின்ற சமூகமாக நாங்கள் இருக்க வேண்டும் என அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

திவிநெகும திட்டத்தின் கீழ் “சஹனஅருண” கடன் வழங்கும திட்டம் நேற்றுமுன்தினம் மன்னார் திவிநெகும சமூக தள வங்கி வளவில் நடைபெற்ற போது அந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,திவிநெகும திட்டத்தின் ஊடாக கிராமத்தில் இருக்கின்ற தனிநபரை, அவருடைய பொருளாதாரத்தை மேம்படுத்தி, கிராம மக்கள் பிரதேச ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் வளர்ந்து இந்த நாடு, தேசிய ரீதியாக பொருளாதாரத்தில் மேம்படுவதற்கு இந்தத் திட்டம் வழிவகுக்கின்றது. எனவே இந்த அடிப்படையில் இந்த நாட்டின் சுற்றுலாத்துறை மேம்பாடடைந்துகொண்டு போகின்றது.

அதேபோல ஏற்றுமதி அதிகரித்துச் செல்லுகின்றது. இந்த நாட்டின் முதலீடு அதிகரித்துச் செல்லுகின்றது. இவ்வாறு இந்த நாட்டின் பொருளாதாரம் மேன்மையடைகின்ற நிலையில் இந்த மாவட்டத்தில் வாழ்கின்ற குறிப்பாக மீன்பிடி, விவசாயம், வியாபாரத்தைச் செய்கின்ற மக்களாக காணப்படுகின்றனர். எனவே மீன்பிடி, விவசாயத் துறையை மேம்படுத்துகின்ற வகையில் சமுர்த்தி திட்டத்தின் ஊடாக எவ்வாறு மீன்பிடி, விவசாயத்துறையினை மேம்படுத்துவது என்று சிந்திக்க வேண்டியுள்ளது. இத்திட்டங்களை மேம்படுத்த வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக, மோட்டார் சைக்கிளை வாங்குவதற்காக அல்லது வேறு தேவைக்காக வட்டிக்கு பணம் பெற்று, அதனை செலுத்த முடியாத நிலையில், எமது சொத்துக்களை விற்கின்ற நிலைக்கு நாம் வந்து விடக் கூடாது என்றார்.

# விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, டச்சு வீதியிலுள்ள இலத்திரனியல் பொருட்களின் வர்த்தக நிலையத்தை உடைத்து திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் நேற்று உத்தரவிட்டார்.

டச்சு வீதியிலுள்ள மேற்படி இலத்திரனியல் கடை, கடந்த 2013ஆம் ஆண்டு யூலை மாதம் 1ஆம் திகதி உடைக்கப்பட்டு, அங்கிருந்த 36 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

இது தொடர்பிலான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்த நிலையில், சம்பவத்துடன் தொடர்புடையதாக அடையாளப்படுத்தப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் தலைமறைவாகியிருந்தனர்.

தொடர்ந்து, மேற்படி சந்தேக நபர்கள் நால்வரும் கடந்த யூன் மாதம் சாவகச்சேரிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து, சந்தேக நபர்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட வேளை, நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மேற்படி நால்வரின் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதவான் விளக்கமறியலை நீடித்தார்.


# ஐ.தே.க.வின் 1978ஆம் ஆண்டு எதேச்சாதிகார அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும்!







**இந்த அரசியல் அமைப்பை ஜே.ஆர்.அரசாங்கம் கொண்டுவந்த போது, எதிர்பாராத விபத்தாக பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவிக்காது நழுவல் போக்கைக் கடைப்பிடித்தது.**



**தற்போதைய அரசியல் அமைப்பு எதேச்சாதிகாரம் மிக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மட்டும் கொண்டிருக்கவில்லை. விருப்பு வாக்கு என்ற ஒரே கட்சியினரே ஒருவரின் கழுத்தை மற்றவர் திருகும் கேடுகெட்ட முறையையும் கொண்டிருக்கிறது.**

வானவில் 43 தலையங்கத்திலிருந்து

தற்போது இலங்கையில் நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பு 1978இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசால் கொண்டுவரப்பட்டதாகும். 1977 பொதுத்தேர்தலில் ஐ.தே.க அமோக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட இந்த அரசியல் அமைப்பைப் பற்றி சிலாகித்துப் பேசிய அன்றைய பிரதமரும், பின்னர் இந்த அரசியல் அமைப்பின் மூலம் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதியாக மாறியவருமான ஜே.ஆர்.ஜெய்வர்த்தன, "இந்த அரசியல் அமைப்பின் மூலம் ஆணைப் பெண்ணாக்குவதை விட மற்ற எல்லாவற்றையும் சாதிக்க முடியும்" எனக் கூறினார்.

இலங்கை அரசியலில் "குள்ளநரி" என்றும், "யங்கி டிக்கி" எனவும் பெயர் பெற்றவரான ஜே.ஆர், ஒரு அரசியல் சாசனத்தைக் கொண்டு வருகிறார் என்றால், அதில் நிறைய அர்த்தம் இருக்கிறது என்றுதான் அர்த்தம்.

சுதந்திர இலங்கை இதுவரை மூன்று அரசியல் அமைப்புகளைக் கண்டிருக்கிறது. முதலாவது அரசியல் அமைப்பு இலங்கை 1948இல் சுதந்திரம் அடைந்த பொழுது பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் தயாரித்து வழங்கப்பட்ட சோல்பரி அரசியல் அமைப்பாகும்.

அது அதைத் தயாரித்த சோல்பரி என்ற பிரித்தானியரின் பெயராலேயே அழைக்கப்பட்டது.

இந்த அரசியல் அமைப்பு 1948 முதல் 1972 வரை 24 ஆண்டுகள் நடைமுறையில் இருந்தது.

இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானிய காலனித்துவ வாதிகளால் தயாரிக்கப்பட்ட அரசியல் அமைப்பு என்ற வகையில் இது சுயாதீனமுள்ள ஒரு சுதந்திர நாட்டுக்கு பொருத்தமானதாக இருந்திருக்க முடியாது.

அதன்பின்னர் 1970இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை யிலான சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்பன இணைந்த கூட்டரசாங்கம் இலங்கையை பிரித்தானிய முடியரசிலிருந்து துண்டித்து புதிய குடியரசு அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வந்தது.

இலங்கையை "ஜனநாயக சோசலிசக் குடியரசு" என்ற பெயரில் அறிமுகம் செய்த இந்த அரசியல் அமைப்பு, பல முற்போக்கான அரசியல் அம்சங்களைக் கொண்டிருந்த போதிலும், பல பாதகமான அம்சங்களையும் கொண்டிருந்தது.

அதுவும் பழம்பெரும் இடதுசாரிக் கட்சி என்ற பெருமையைப் பெற்ற லங்கா சமசமாஜக் கட்சியின் பிரசித்திபெற்ற தலைவர்களில் ஒருவரும், அப்போதைய சிறீமாவோ அரசில் அரசியல் அமைப்பு அமைச்சருமாக இருந்தவருமான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த குடியரசு அரசியல்மைப்பில் சிறுபான்மையினருக்கு ஓரளவு பாதுகாப்பாக சோல்பரி அரசியல் அமைப்பில் இருந்த 28ஆவது சரத்து நீக்கப்பட்டதுடன், இலங்கையை ஒரு பௌத்த நாடாகவும் பிரகடனம் செய்தது.

இதன் காரணமாக எப்போதுமே ஏகாதிபத்திய விசுவாசிகளாக இருந்து வரும் தமிழ் தலைமைகள் இந்த அரசியல் அமைப்புக்கு எதிரான கிளர்ச்சியை ஆரம்பிப்பதற்கு வழிவகுத்தது.

மூன்றாவது அரசியல் அமைப்பு 1978இல் ஜே.ஆர். அரசால் கொண்டு வரப்பட்டதாகும். அது இன்றுவரை, அதாவது 36 வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது. இந்த அரசியல் அமைப்பைக் கொண்டு வந்ததன் நோக்கம், சர்வ வல்லமை பொருந்திய நிறைவேற்று ஜனாதிபதி ஒருவர் மூலம் நாட்டை நிர்வகிப்பதாகும்.

அதற்கு முதல் இருந்த பிரித்தானிய "வெஸ்ற்மினிஸ்ரர்" அரசியலமைப்பில் பாராளுமன்றத்துக்கு அதிக அதிகாரம் இருந்து, ஆளும் கட்சி ஒரு தீர்மானத்தை அமுல்படுத்த முயற்சிக்கையில் அதை எதிர்க்கட்சி குழப்புகின்ற சூழ்நிலையில், நிறைவேற்று அதிகார முறைமையின் மூலம் அவ்வாறு நிகழும் சூழ்நிலை இல்லாமல் விடயங்களை உறுதியாக நடைமுறைப் படுத்த முடியும் என்ற நோக்கிலேயே இந்த அரசியல் அமைப்பு கொண்டு வரப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

ஆனால் முன்னெப்போதையையும் விட இந்த அரசியல் அமைப்பின் கீழேயே நாடு நீண்ட காலம் அவசரகாலச் சட்டத்தின் கீழும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழும் ஆட்சி செய்யப்பட்டதுடன், இனப்பிரச்சினை உள்நாட்டு யுத்தமாகவும் உருவானது. இந்த நிறைவேற்று ஜனாதிபதி முறைமையைப் பயன்படுத்தி எந்தவொரு ஜனாதிபதியும் நல்ல விடயங்கள் எதையும் செய்ததாக வரலாறு இல்லை.

இந்த அரசியல் அமைப்பை ஜே.ஆர்.அரசாங்கம் கொண்டுவந்த போது, எதிர்பாராத விபத்தாக பிரதான எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்ப்புத் தெரிவிக்காது நழுவல் போக்கைக் கடைப்பிடித்தது.

ஆனால் யதார்த்தத்தில் உண்மையான எதிர்க்கட்சியாக இருந்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இடதுசாரிக் கட்சிகளும், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் என்பனவும் இந்த அரசியல் அமைப்பை கடுமையாக எதிர்த்தன.

இந்த அரசியல் அமைப்பின் கீழ் நாட்டை ஐ.தே.க அரசு எத்தகைய சீரழிவு நிலைக்கு இட்டுச் சென்றது என்பதை அதன் 17 வருட ஆட்சி எடுத்துக் காட்டியது.

இந்த அரசியல் அமைப்பின் கீழான ஐ.தே.கவின் 17 வருட எதேச்சாதிகார ஆட்சியை வீழ்த்தி 1994இல் பதவிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான கூட்டரசாங்கம், இந்த அரசியல் அமைப்பை ஒழித்துக் கட்டுவதாகச் சொல்லிக் கொண்டே பதவிக்கு வந்தது.

ஆனால் அதை ஒழித்துக் கட்டுவதற்கு அவரது அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதுமாத்திரம் இல்லாமல், இந்த அரசியல் அமைப்பின் கீழ் அவர் மேலுமொரு தடவை ஜனாதிபதியாக இருந்துவிட்டுப் போனார்.

அதேபோல அவரது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதியாக தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இரண்டாவது தடவையாகவும் தற்பொழுது இருந்து வருகிறார். அவரும் இந்த ஐ.தே.க கொண்டுவந்த எதேச்சாதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்துக்கட்டும் விருப்பம் அற்றவராகவே இருந்து வருகிறார்.

அதுமட்டுமல்லாமல், ஜே.ஆர். கூட செய்ய நினைக்காத ஒரு திருத்தத்தை அவர் அரசியல் அமைப்பில் மேற்கொண்டுள்ளார்.

அதாவது அரசியல் அமைப்பில் 18ஆவது திருத்தம் ஒன்றைக் கொண்டுவந்து ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கக்கூடாது என்று இருந்த சரத்தை நீக்கிவிட்டுள்ளார். இதன் நோக்கம் தான் முடியுமான காலம் வரை பல தடவைகள் ஜனாதிபதி பதவி வகிப்பதற்கே என்பது சொல்லாமலே விளங்கும்.

இந்தத் தவறான திருத்தத்தை எதிர்த்திருக்க வேண்டிய அரசின் பங்காளிகளான இடதுசாரிக் கட்சிகள், மக்களுடைய எதிர்பார்ப்புக்கு மாறாக அந்த நேரத்தில் இந்தத் திருத்தத்தை பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்தன. தங்களுடைய நடவடிக்கை தவறு என்பதை இவ்வருடம் யூலை மாதத்தில் இரத்தினபுரியில் நடைபெற்ற தனது தேசிய மாநாட்டில்தான் காலம் பிந்தி கம்யூனிஸ்ட் கட்சி சுய விமர்சன ரீதியில் ஏற்றுக் கொண்டுள்ளது.

தற்போது இடதுசாரிக் கட்சிகள் உட்பட நாட்டில் உள்ள பல அமைப்புகள் தற்போதைய அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என கோரத் தொடங்கியுள்ளன. அவ்வாறு கோருபவர்களின் நோக்கம் வெவ்வேறு நோக்கங்களை உடையவை என்ற போதிலும், ஐ.தே.கவின் இந்த அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் நியாயமானது.


ஏனெனில் தற்போதைய அரசியல் அமைப்பு எதேச்சாதிகாரம் மிக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மட்டும் கொண்டிருக்கவில்லை. விருப்பு வாக்கு என்ற ஒரே கட்சியினரே ஒருவரின் கழுத்தை மற்றவர் திருகும் கேடுகெட்ட முறையையும் கொண்டிருக்கிறது.

எனவே இந்த மக்கள் விரோத அரசியல் அமைப்பை நீக்கிவிட்டு, அதன் இடத்தில் நாட்டு மக்கள் எல்லோரினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும், பாராளுமன்றத்துக்கு சகல அதிகாரங்களையும் வழங்கும் புதிய அரசியல் அமைப்பொன்றைக் கொண்டு வருவது அவசியமாகும்.

தாம் எப்போதும் வெற்றி பெறுவோம் என்ற இறுமாப்பில் இந்த அரசியல் அமைப்பை நீக்குவதற்கு தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் மறுக்குமாக இருந்தால், அவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுவதுடன், பின்னர் வரக்கூடிய மக்கள் விரோத, ஏகாதிபத்திய சார்பு அரசொன்று மிகவும் மோசமான முறையில் இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையைப் பயன்படுத்தக்கூடும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# வடக்கைப் போன்று தென்பகுதியிலும் தமிழ் பாடசாலைகள் முன்னேற்றமடையும்

## ஜனாதிபதி உறுதிமொழி



வடக்கைப் போன்று தென் பகுதியிலும் தமிழ் பாடசாலைகளை முன்னேற்றுவது எமது நோக்கமாகும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மொனராகலை பாலாறு விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடம் நேற்று முன்தினம் ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மொனராகலை பாலாறு விபுலானந்த தமிழ் வித்தியாலயத்திறகு வருகை தந்து இங்கு மகிநதோதய விஞ்ஞான ஆய்வு கூடமொன்றை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் மகிந்தோதய ஆய்வு கூடங்களைத் திறந்து வைத்துவிட்டு இங்கு தமிழ் பாடசாலையிலும் அதேபோன்ற மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடத்தைத் திறந்து வைப்பது எமக்கு மகிழ்ச்சி.

பிள்ளைகளே! நீங்களே இந்த நாட்டின் எதிர்காலம். இந்த நாட்டின் சிறந்த செல்வங்கள். நீங்கள் அனைவரும் சிறப்பாக முன்னேற வேண்டும். படித்தால் மட்டும் போதாது சிறந்த குண நலன்களைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியம்.

இந்த வாரத்தில் மாத்திரம் நாம் பல மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்களைத் திறந்து வைத்துள்ளோம். இவை பெற்றோர்களுக்கல்ல. எமது எதிர்கால சந்ததியர்களான பிள்ளைகளுக்கானவை. இந்த நாட்டில் மட்டுமின்றி உலகை வெல்லக் கூடிய மாணவர்களாக உங்களைக் காண்பதே எமது எதிர் பார்ப்பு.

தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பேதம் எம்மிடம் கிடையாது. நாம் அனைவரும் இலங்கையில் பிறந்தவர்கள். இது தான் நம் எல்லோருக்குமான நாடு. எமக்கு வேறு நாடு கிடையாது. வேறு நாடுகள் தமிழ் மக்களைப் பாரமெடுக்கப் போவதுமில்லை. இதனை மனதிற்கொண்டு நாம் பிறந்த இந்த தாய்த் திருநாட்டை நாம் அனைவரும் இணைந்து பாது காக்க வேண்டும். அதற்கான பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

வடக்கு, தெற்கு - தமிழ், சிங்களம் என்ற பேதம் எம்மிடமில்லை. நாம் அனைவரும் இந்த நாட்டில் பிறந்தவர்கள் என்ற வகையில் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தைப் பாதுகாத்து நாட்டையும் பாதுகாப்போம்.

இதனை கருத்திற் கொண்டே அனைத்து மாணவர் களுக்கும் சிறந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை நாம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளோம் என்றார்.

# 20 வருட அரசியலில் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த



(கொழும்பு)

அமைச்சர் திஸ்ஸ கரலியத்த அரசியலுக்குள் பிரவேசித்து 20 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு சமூக சுகாதார அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா அனுராதபுரம் மாவட்ட கூட்டுறவு சங்க கேட்போர் கூட்டத்தில் நடைபெற்றது.

இவர் சுதேச வைத்தியத் துறை, சுகாதாரம், காணி மற்றும் சமய விவகாரம் ஆகிய அமைச்சுப் பொறுப்புக்களையும் வகித்துள்ளார். இதன் மூலம் மக்களுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

மிரிஸ்ஸவெட்டிய விகாரை அதிபர் ஈதல் வெட்டுவெவே ஞானதிலக தேரர், வட மத்திய மாகாண ஆளும் கட்சி பிரதான அமைப்பாளர் கல்யாணி கரலியத்த, பதவிய மற்றும் ரம்பேவ பிரதேச தலைவர்கள் உட்பட பிரமுகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தனது அரசியல் குருவான காலஞ்சென்ற மைத்திரிபால சேனாநாயக்காவை கௌரவிக்கும் முகமாக அன்னாரின் உருவச்சிலைக்கு அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மலர்மாலை சூடினார்.

சமூக சுகாதார அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.



சுற்றுலா மேம்பாடு கருதி இலங்கை வந்திருந்த சீன அழகிகள் 15 பேரும் நேற்றுமுன்தினமிரவு மத்தள சர்வதேச விமான நிலையம் ஊடாக சீனா திரும்பிச்சென்றனர்.

# இவ்வார இறுதிக்குள் வெட்டுப்புள்ளிகள் வெளியாகும்

புதிய கல்வி ஆண்டுக்காக பல்கலைக்கழகங்களில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப் புள்ளிகளை இந்த வார இறுதிக்குள் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவரகளின் வெட்டுப் புள்ளிகளை வெளியிடத் தேவையான நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவற்றை மறு பரிசீலனை செய்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி இம்மாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# நீதிமன்ற வளாகத்தில் "நாய்" வாக்குமூலமளிக்க உத்தரவு

பொலிஸ் நிலையத்திற்கு சென்று வாக்கு மூலமொன்றை அளிக்குமாறு பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரருக்கு, நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி மைத்திரி குணரட்னவை "நாய்" என நீதிமனற வளாகத்தில் வைத்து ஞானசார தேரர் திட்டியமை தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளின்போதே, ஞானசார தேரர் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்க வேண்டுமென கோரியுள்ளது.

கொழும்பு கோட்டே நீதவான் திலின கமகே நேற்று முன்தினம் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜுன் மாதம் 9 ஆம் திகதி கலகொடத்தே ஞானசார தேரர், சட்டத்தரணியை திட்டியிருந்தார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் இடம்பெற்று மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் பொலிஸார் இதுவரையில் விசாரணை நடாத்தவில்லை என, மைத்திரி குணரட்னவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பௌத்த பிக்கு ஒருவருக்கு எவ்வாறு இந்தளவு அதிகாரம் கிடைக்கப் பெற்றது என சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வாக்கு மூலமொன்றை பதிவு செய்துகொள்ள பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு கல கொடத்தே ஞானசார தேரருக்கு அழைப்பு முன்னர் விடுத்திருந்த போதிலும் அவர் இதுவரையில் பொலிஸ் நிலையத்திற்கு வரவில்லை என கொம்பனித்தெரு பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காரணங்களைக் கருத்திற் கொண்ட நீதவான், உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு சென்று ஞானசார தேரர் வாக்கு மூலமொன்றை அளிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

# சதிகாரர்களிடமிருந்து நாட்டைக் காக்கவேண்டும்

வெளிநாட்டு சக்திகளிட மிருந்தும், உள்நாட்டு சதிகாரர்களிடமிருந்தும் நாட்டைகாக்க வேண்டியது அவசியமானது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஆகியோருக்கு இடையில் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில், நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியும், சூழவுள்ள கடற்பரப்பின் மூன்றில் இரண்டு பகுதியும் புலிகளுக்கு தாரை வார்க்கப் பட்டிருந்தன.

பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற ரீதியில் இந்த தேசத்தை அரசாங்கம் ஒரே கொடியின் கீழ்க்கொண்டு வந்தது.

நாட்டின் அனைத்து இன மக்களும் அச்சமின்றி வாழக் கூடிய பின்னணியை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் ஏற்படுத்தியது.

நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொறுப்பாக மாறியுள்ளது. ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு வரும் உலக நாடுகளில் இலங்கையின் சுதந்திரக் கட்சி முக்கிய இடத்தை வகித்து வருகின்றது என்றார்.


அண்மையில் மத்துகம பிரதேசத்தில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தபால்மூல வாக்களிப்பை கண்காணிக்க நடவடிக்கை

ஊவா மாகாண சபை தேர்தல்களின். தபால் மூல வாக்களிப்புக்கான நடவடிக்கைகளைக் கண்காணிக்க தேர்தல்கள் செயலகம் தீர்மானித்துள்ளது. தபால் மூல வாக்களிப்பு நாளை மற்றும் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது. குறித்த இரு தினங்களிலும் வாக்களிப்பு நிலையங்களைக் கண்காணிக்க தேர்தல்கள் செயலகத்தினால் அதிகாரிகள் அனுப்பி வைக்கப் படவுள்ளனர்.

# 'உதவும் கரங்கள்' கடன்திட்டம்

# ஓமந்தையிலும் ஆரம்பித்துவைப்பு



(வவுனியா)

இலங்கை முழுவதும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட 'சஹண அருண' உதவும் கரங்கள் செயற்றிட்டம் ஓமந்தை சமுர்த்தி வங்கிச் சங்கத்திலும் சிறப்புற இடம்பெற்றது. வவுனியா ஓமந்தை சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஜே.ஜெயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த திட்டத்தினை வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் வட மாகாண பிரதி பணிப்பாளர் எஸ்.குமாரசிறி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

ஓமந்தை சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் மு.ப. 10.30 மணியளவில் குறித்த கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தின் பயனாளிகள் 14 பேருக்கு 5 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை கடன் தொகையாக வழங்கப்பட்டது.


குறித்த நிகழ்வில் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் வட மாகாண பிரதி பணிப்பாளர் எஸ்.குமாரசிறி, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வவுனியா மாவட்ட பொறுப்பாளர் எஸ்.சிவகுமார், சமுர்த்தி பிரதி பணிப்பாளர் எம்.வீரசிங்க, வவுனியா பிரதேச செயலக கணக்காளர் ஜெயபாஸ்கர், தலைமைபீட முகாமையாளர்களான திருமதி எஸ்.சாந்தினி, மற்றும் கே.பாலசேகர், உட்பட பயனாளிகள் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (70)

# விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்.றோட்டறிக் கழகம் தற்கொலைகளுக்கெதிரான விழிப்புணர்வை மேற்கொள்ளும் வகையில் விழிப்புணர்வு சைக்கிளோட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. நாடு பூராகவும் இடம்பெறும் இச் சைக்கிளோட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

தொலைபேசி இலவச உளவளத்துணை ஆலோசனை சேவை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் விதமாக இச் சைக்கிளோட்டம் இடம்பெறவுள்ளது. சைக்கிளோட்டத்திற்கு சமாந்தரமாக விழிப்புணர்வு நாடகமும் காண்பிக்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு இன்று மதியம் 2 மணிக்கு யாழ்.பிரதான பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ளது.

சைக்கிளோட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் வாழ்த்து தெரிவிப்பதற்கும் விழிப்புணர்வு நாடகத்தை காண்பதற்கும், விழிப்புணர்வு நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ். றோட்டறிக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது. (48)



வரலாற்றுப் புகழ் மிக்க தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஆறாம் நாளான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை துர்க்கையம்மன் மஞ்சத்தில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வருவதைக் காணலாம்.


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.


வாரமலர்
தினமுரசு
04.09.2014

நாளைய தினமுரசு வாரமலரில்...




- இருதரப்புப் பேச்சும் இழுத்தடிப்பும்!
- ஹமாஸ் - இஸ்ரேல் போர் நிறுத்தம் - ஓர் அலசல்
- கூட்டமைப்பின் வஞ்சனையில் பாதிக்கப்படும் வன்னி மக்கள்
- டில்லியில் நடந்தது இதுதான்!
- தமிழர் மறக்கும் 'தட்டிவான்'

ஓய்வு தேவை




உங்கள் முகவரிகளிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு




# மெஸ்சி விலகல்

(மட்ரிட்)

உலக சம்பியன் ஜேர்மனிக்கு எதிரான நட்பு கால்பந்து போட்டியிலிருந்து, ஆர்ஜென்ரீன அணிக் கப்டன் மெஸ்சி விலகினார்.

ஜேர்மனியில், ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி அணிகள் மோதும் நட்பு ரீதியிலான சர்வதேச கால்பந்து போட்டி இன்று நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான ஆர்ஜென்ரீனா அணியிலிருந்து காயம் காரணமாக கப்டன் மெஸ்சி விலகினார். சமீபத்தில் முடிந்த, வில்லாரியல் அணிக்கு எதிரான லா லிகா தொடரின் லீக் போட்டியின் போது, பார்சிலோனா அணிக்காக விளையாடிய இவரது இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

சமீபத்தில் பிரேசிலில் நடைபெற்ற உலக கோப்பை இறுதிப் போட்டியில், ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின. இப்போட்டியில் ஜேர்மனி அணி வெற்றி பெற்று, உலக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இப்போட்டியில் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுக்க ஆர்ஜென்ரீனா அணிக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் நட்சத்திர வீரர் மெஸ்சி இல்லாதது பின்னடைவு.

சர்வதேச கால்பந்து அரங்கில், இவ்விரு அணிகள் 21 முறை மோதின. இதில் ஆர்ஜென்ரீனா 9, ஜேர்மனி 7 போட்டிகளில் வென்றன. ஐந்து போட்டிகள் சமநிலையில் முடிந்தன. இவ்விரு அணிகள் மோதிய 13 நட்பு போட்டியில், 8இல் ஆர்ஜென்ரீனாவும், 3இல் ஜேர்மனியும் வெற்றி பெற்றன. இரண்டு போட்டிகள் சமநிலையாகின.

# காலிறுதியில் செரீனா

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு செரீனா வில்லியம்ஸ், ஜோகோவிச் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்று ஆட்டத்தில் முதல் நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச், ஜேர்மனி வீரர் பிலிப்புடன் மோதினார். இதில் ஜோகோவிச் 6-1, 7-5, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.


மற்றொரு 4ஆவது சுற்று ஆட்டத்தில் 8ஆம் நிலை வீரரான ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 9ஆம் நிலை வீரரான சோங்கா (பிரான்ஸ்) பலப்பரீட்சை நடத்தினர். இதில் ஆன்டி முர்ரே 7-5, 7-5, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வென்றார். காலிறுதியில் ஜோகோவிச் ஆன்டி முர்ரே மோதவுள்ளனர். முன்னணி வீரர்கள் இருவர் மோதும் இந்த காலிறுதி போட்டி இரசிகர்கள் இடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. இதில் முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 6-3, 6-3 என்ற நேர்செட் கணக்கில் எஸ்டோபியா வீராங்கனை கானாபியை எளிதாக வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் இத்தாலி வீராங்கனை பென்னாட்டா 7-5, 6-2 என்ற செட் கணக்கில் அவுஸ்ரேலியா வீராங்கனை டெலாக்குவாலை வீழ்த்தினார். காலிறுதியில் செரீனா வில்லியம்ஸ் பென்னாட்டா மோதுகிறார்கள்.


4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 7ஆம் நிலை வீராங்கனையான கனடாவின் பவுச்சர்ட் அதிர்ச்சி தோல்வியடைந்தார். அவர் 7-6 (7-2), 6-4 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் மகரோவாவிடம் வீழ்ந்தார். மற்றொரு ஆட்டத்தில் அசரென்கா (பெலாரஸ்) வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார். அவர் 4-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் சேர்பியாவின் குரினிக்கை வீழ்த்தினார். மகரோவாவும், அசரென்காவும் காலிறுதியில் மோதவுள்ளனர்.

இதேவேளை, மரியா ஷரபோவா நான்காவது சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒரு நாள் போட்டியிலிருந்து குக், பெல்லை நீக்கவேண்டும்

ஒரு நாள் போட்டிக்கான அணியிலிருந்து குக், இயன் பெல் போன்றோரை உடனடியாக நீக்க வேண்டும் என இங்கிலாந்து முன்னாள் வீரர் ஜெப்ரி பொய்கொட் தெரிவித்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி மரக்கட்டை போல் செயற்படுகிறது. சுழற்பந்துக்கு எதிராக விளையாட மிகவும் சிரமப்படுகிறார்கள். திடீரென திசை திரும்பும் பந்தை அவர்களால் சந்திக்க முடியவில்லை. கப்டன் கூக், இயன்பெல், ஜோ ரூட் ஆகியோர் டெஸ்ட் போட்டிகே தகுதியானவர்கள். அவர்களை ஒருநாள் போட்டி அணியில் இருந்து நீக்க வேண்டும். டெஸ்ட் போட்டியில் சிறப்பாக செயற்பட்டதை அடிப்படையாக வைத்து ஒருநாள் போட்டியை தேர்ந்தெடுத்து உள்ளனர். இது தவறான அணுகுமுறை. இதன் காரணமாகவே இங்கிலாந்து அணியால் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியாமல் போனது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# ஊக்க மருந்தை கட்டுப்படுத்த 2 வாயுக்கள் அறிமுகம்

விளையாட்டுத்துறையில் ஊக்க மருந்து பயன்பாட்டை மேலும் தடுக்க, முதல் முறையாக இரண்டு வாயுக்களை தடை செய்யப்பட்டுள்ள பட்டியலில், வாடா எனும் ஊக்க மருந்து பயன்பாட்டுக்கு எதிரான சர்வதேச அமைப்பு சேர்த்துள்ளது.

அரிதான வாயுக்கள் என்று அறியப்படும் ஆர்கான் மற்றும் ஜெனான் ஆகிய இருவாயுக்களுமே இப்படியலில் இணைக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக ரஷ்யா இந்த இரண்டு வாயுக்களையும் தமது விளையாட்டு வீரர்களின் திறமையை அதிகரிக்கும் வகையில் பயன்படுத்தியது என்று வாடா குற்றஞ்சாட்டுக்கிறது.

ஆர்கான் மற்றும் ஜெனான் வாயுக்கள் உடலுக்குள் செலுத்தப்படும்போது, அவர் சிவப்பு இரத்த அணுக்களை அதிகரிக்கச் செய்து, அதன் மூலம் உடலுக்கு, இயற்கைக்கு முரணான வகையில் வலுசேர்க்கிறது என்று வாடா வாதிடுகிறது.

இந்த இரண்டு வாயுக்களும் பெரும்பாலும் தொழிற்துறையிலேயே பயன்படுத்தப்படுகின்றன. ஆர்க் வெல்டிங் மற்றும் நியான் பல்புகள் ஆகியவற்றில் இவைகளின் பயன்பாடுகள் உள்ளன.

தற்போது வாடா அமைப்பு இந்த இருவாயுக்களையும் தடை செய்யப்பட்டுள்ள பட்டியலில் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# களத்திற்கு வெளியில்...

சிம்பாப்வே அணிக்கெதிரானபோட்டியில் நடுவரிசை வீரர் ஸ்மித்தை அணியில் உள்ளடக்கவில்லை. சுழற்பந்தை எதிர்கொள்வதில் சிறந்த வீரர் அவர். அவர் இடம் பெறாதது ஏமாற்றம் அளித்தது. தேர்வு குழுவினரின் முடிவால் தான் அவர் நீக்கப்பட்டார். தேர்வு குழுவின் இந்த முடிவு சரியானது அல்ல. இந்த முடிவு குறித்து தேர்வுக் குழு என்னிடம் விவாதித்திருக்க வேண்டும்.

**மைக்கல் கிளார்க் (ஆஸி. கப்டன்)**

கடந்த காலத்தைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. அதைப்பற்றி கதைப்பதால் எவ்வித பிரயோசனமும் இல்லை. என்னால் எதைச்செய்யமுடியும் என்பதை நான் அறிவேன். அது குறித்து எனக்கு நம்பிக்கை உள்ளது. நான் மன உளைச்சலுடன் பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடரில் பங்கேற்றேன். ஆனால் எனது ஆற்றல் மங்கவில்லை என்பதை இத்தொடரின் மூலம் நிருபித்துள்ளேன்.

**திசர பெரேரா (இலங்கை அணி வீரர்)**

இந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களுக்கான இடம் காலியாக உள்ளது. கடந்த காலங்களில் உள்ளூர் போட்டிகளில் சிறப்பாக செயற்பட்டுள்ளேன். இதேபோல அடுத்து வரவுள்ள ரஞ்சி, ஐ.பி.எல்., போன்ற உள்ளூர் தொடர்களில் திறமையை நிருபித்து, விரைவில் இந்திய அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இடம் பிடிப்பேன். இதற்கான தகுதி என்னிடம் உள்ளது. தேவைப்படும் பட்சத்தில் விக்கெட் காப்பாளராகவும் களமிறங்குவேன். அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலக கோப்பைக்கான இந்திய அணியில் இடம் பிடிப்பது முதல் இலக்கு. விரைவில் சம்பியன்ஸ் லீக் தொடருக்காக, கொல்கத்தா அணியில் இணைந்து பயிற்சி மேற்கொள்ள உள்ளேன்.

**ரொபின் உத்தப்பா (இந்திய அணி வீரர்)**

எனது பயிற்சியாளருடன் 50 முதல் 60 நாட்கள் வரை எனது குறைகளை சரிசெய்வது குறித்து ஆலோசித்தேன். பயிற்சியின்போது தவறுகளைச் சரி செய்து, விக்கெட் வீழ்த்தும் யுத்திகளை கற்றுக் கொண்டேன். அதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. டெஸ்ட் தொடரில் அதிக பிடிகள் தவறவிடப்பட்டன. ஆனால், ஒருநாள் தொடரில் ஏராளமான இளம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் டெஸ்டில் செய்த தவறை ஒருநாள் ஆட்டத்தில் செய்யக் கூடாது என்பதில் முடிவாக இருந்தனர். நொட்டிங்கொமில் நடைபெற்ற ஆட்டத்தில் ஸ்லிப் திசையில் இருந்து சுரேஷ் ரெய்னா பிடித்த பிடி அபாரமானது. அப்போது எனக்கு விக்கெட் கிடைத்து விட்டது என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ரெய்னாவின் பிடி நான் உள்பட ஸ்லிப்பில் நிற்கும் வீரர்களுக்கு ஊக்கமளித்துள்ளது.

**அஸ்வின் (இந்திய அணி வீரர்)**

# தரப்படுத்தல்; இந்தியா முதலிடம்

முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரில், சிம்பாப்வே அணியிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்த அவுஸ்ரேலிய அணி ஒரு இடம் பின்தங்கியதால், இந்திய அணி முதலிடத்தைக் கைப்பற்றியது. இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா அபாரமாக வென்று 2-0 என முன்னிலை பெற்றதை அடுத்து, அவுஸ்ரேலியா மற்றும் இந்தியா தலா 114 புள்ளிகளுடன் கூட்டாக முதலிடத்தில் இருந்தன. இந்த நிலையில், சிம்பாப்வே அணியிடம் அவுஸ்ரேலியா எதிர்பாராத வகையில் தோற்றதால், அந்த அணிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்ட தரவரிசை பட்டியலில், இந்தியா 114 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ஆஸி. 111 புள்ளிகளுடன் 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. தென்னாபிரிக்கா 113 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலுள்ளது. எனினும், இந்தியா - இங்கிலாந்து தொடரில் எஞ்சியுள்ள 2 லீக் ஆட்டங்களின் முடிவு மற்றும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்கா, அவுஸ்ரேலியாவின் செயற்பாட்டை பொறுத்து தரவரிசையில் மாற்றம் இருக்கும்.

**தரப்படுத்தலில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள அணிகள்**

| | | |
|---|---|---|
| 01 | இந்தியா | 114 |
| 02 | தென்னாபிரிக்கா | 113 |
| 03 | இலங்கை | 111 |
| 04 | அவுஸ்ரேலியா | 111 |
| 05 | இங்கிலாந்து | 106 |
| 06 | பாகிஸ்தான் | 100 |
| 07 | நியூசிலாந்து | 098 |
| 08 | மே.தீவுகள் | 096 |
| 09 | பங்களாதேஷ் | 069 |
| 10 | சிம்பாப்வே | 058 |


# ரியால் மட்ரிட் அதிர்ச்சித் தோல்வி

லா லிகா கால்பந்து போட்டியின் ரியல் சோஸிடாட் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 2 – 4 என்ற கோல் கணக்கில் ரியால் மட்ரிட் அணி தோல்வியடைந்தது. 2 – 0 என முன்னிலையில் இருந்த ஐரோப்பிய சம்பியனான ரியல் மட்ரிட் அணி, பின்னர் எதிரணியை நான்கு கோல்கள் அடிக்க வாய்ப்பளித்து, விமர்சனத்துக்கு வழிவகுத்து விட்டது. ஸ்பெயினில் உள்ள பிரபல கிளப் அணிகளுக்கு இடையிலான ஸ்பானிஷ் லீக் (லா லிகா) கால்பந்து போட்டியின், மட்ரிட் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட்டும், ரியல் சோஸிடாட் அணியும் மோதின. நட்சத்திர வீரரான கிறிஸ்டியானா ரொனால்டோ இந்த ஆட்டத்தில் பங்கேற்கவில்லை. அத்துடன், முன்னணி வீரரான ஏஞ்சல் டி மரியா, ஜேபி அலோன்ஸா ஆகியோர் வேறு அணிகளுக்கு மாறி விட்டதால், ரியல் மட்ரிட் அணி முழுப்பலத்துடன் களமிறங்கவில்லை. இருப்பினும், செர்ஜியா ரமேஸ், டோனி க்ரூஸ், கரீம் பென்ஸிமா, கேரத் பேல், ஜேம்ஸ் ரோட்ரிகஸ் ஆகிய பிரபல வீரர்கள் இருப்பதால் ரியல் மாட்ரிட் வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆட்டம் ஆரம்பமாகிய முதல் 15 நிமிடங்களில் செர்ஜியா ரமேஸ், கேரத் பேல் இரண்டு கோல்கள் அடிக்க ரியல் மட்ரிட் அணி முன்னிலை பெற்றது. ஆனால், அடுத்த ஒரு மணி நேரமும் ரியல் சோஸிடாட் அணி ஆட்டத்தைத் தங்கள் வசம் எடுத்துக் கொண்டது. சோஸியாட் அணியின் இனிகோ மார்டினெஸ், டேவிட் ஜூருடுஸா (2 கோல்கள்), கர்லோஸ் வேலா ஆகியோர், ரியல் மட்ரிட்டின் பின்களத்தை ஏமாற்றி அசத்தலாக கோல் அடித்தனர். ஆனால், ரியல் மட்ரிட் வீரர்கள் எவ்வளவோ போராடியும் கோல் அடிக்க முடியவில்லை. முடிவில் ரியல் சோஸிடாட் அணி வெற்றி பெற்றது. முதல் 15 நிமிடங்களுக்குப் பின் நடந்தவை அனைத்தும் வழக்கத்துக்கு மாறானவை. ஆரம்பத்தில் இரண்டு கோல்கள் அடித்து முன்னிலையில் இருந்தோம். அதன்பின் எல்லாமே எங்களுக்கு எதிராக நடந்து விட்டது என ரியல் மட்ரிட் அணியின் கோல் காப்பாளரும், கப்டனுமான ஐகர் கேசிலாஸ் தெரிவித்தார்.



வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடாத்தும் மாபெரும் கால்பந்து

# அரையிறுதிக்கு முன்னேறிய அணிகள்



(உரும்பிராய்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு நவஜீவன், சென். மேரிஸ், றோயல், ஞானமுருகன் அணிகள் முன்னேறியுள்ளன.

பின் தங்கிய பாடசாலை மாணவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக நிதி திரட்டும் முகமாக வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் மாபெரும் கால்பந்துப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது. அணிக்கு ஏழு பேர் கொண்ட இப்போட்டித் தொடர் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

கடந்த 31, 1ஆம் திகதிகளில் காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. முதலாவது காலிறுதிப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன் அணியும் கம்பர்மலை யங்கமன்ஸ் அணியும் மோதின. விறுவிறுவிப்பாக நடைபெற்ற முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு கோலைப் போட்டுக் கொண்டன. பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற நவஜீவன் அணி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு வெற்றியை உறுதி செய்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்பில் யங்கமன்ஸ் அணி செயற்பட்டபோதிலும் இறுதி வரை அது கைகூடவில்லை. நிறைவில் உடுப்பிட்டி நவஜீவன் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின. இரு அணிகளுமே போட்டி நிறைவடையும் வரை ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளும் இரு கோல்களையே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியும் குப்பிளான் விக்னேஸ்வரா அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஊரெழு றோயல் அணி கோல் மழை பொழிந்து முன்னிலை பெற்றது. இறுதி வரை போராடிய விக்னேஸ்வரா அணியால் ஒரு கோல் மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. நிறைவில் ஊரெழு றோயல் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும் வதிரி பொம்மேர்ஸ் அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகள் போன்று களத்தில் செயற்பட்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஞானமுருகன் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (93)

பொன்விழாவை முன்னிட்டு

# கரப்பந்துத் தொடர்

(அச்சுவேலி)

அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் ஒன்றை நடாத்தவுள்ளது.

இப்போட்டித் தொடர் எதிர்வரும் 9,10,11,12,13,14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இப்போட்டித் தொடரில் பங்குகொள்ள விரும்பும் அணிகள் கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும், இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (85)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தால் நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 6,7ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீர - வீராங்கனைகள் அந்தந்தப் பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தருடனோ அல்லது அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுடனோ உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எம்.மோகன் அறிவித்துள்ளார். (48)

# கால்பந்து அபிவிருத்தி கருத்தரங்கு



தெற்கு மற்றும் மத்திய ஆசியாவின் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் சர்வதேச கால்பந்தாட்ட கூட்டமைப்பு, ஆசிய கால்பந்தாட்ட கூட்டமைப்பின் நிபுணர்கள் இணைந்து அபிவிருத்தி தொடர்பிலான கருத்தரங்கினை கடந்த 31 காலை கொழும்பு ஹலதாரி விடுதியில் நடாத்தியுள்ளனர்.

கால்பந்தாட்டம் தனித்த ஒரு தொழில்நுட்ப செயற்பாடின்றி பல மக்களின் பேரார்வத்திற்குரியதொன்றாகும். வாழ்க்கை கனவு, உணர்ச்சி ஆகியவற்றை பிரதிபலிக்கும் ஒன்றாக விளங்கும் கால்பந்தாட்ட விளையாட்டு தொடர்பாக சர்வதேச கால்பந்தாட்டக்கூட்டமைப்பினரால் தொழில்நுட்பம் சார்ந்த அபிவிருத்தி கருத்தரங்கு இடம்பெற்றுள்ளதென சர்வதேச கால்பந்தாட்ட தொழில்நுட்ப அபிவிருத்தி தலைவரும் பணிப்பாளரும் தெரிவித்துள்ளார்.

இறுதி இலக்குகளை அடையும் பொருட்டு அதற்குரிய திட்டங்கள் வேலைகள் முன்னேற்றச் செயற்பாடுகள் இடம்பெற்றன. கால்பந்தாட்ட விளையாட்டு விதியின் படி அனைத்து வசதிகளும் கொண்டதொரு மைதான வசதி இல்லாவிடினும் அதனை தவிர்த்து ஆர்வமுள்ள வீரர்களின் விளையாட்டுத்திறன் மேம்படுத்தப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இவ் அபிவிருத்தி கருத்தரங்கு சகல விதமான வீரர்களையும் மையப்படுத்தி இடம்பெற்று வருகிறது. அடிமட்ட வீரர்கள், நடுத்தர வீரர்கள், மற்றும் உயர் வகுப்பு வீரர்களை மையப்படுத்தி இடம் பெற்றுள்ளது. இந்த கருத்தரங்கு பயிற்சி நெறியை முன்னிட்டு சகல வீரர்களும் பயிற்றுவிப்பாளர்களும் நீண்ட கால அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும்.

# விரைவில் காலிறுதி ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான காலிறுதி ஆட்டமொன்று சென். ஜோண்ஸ் கல்லூரியில் அடுத்த வாரம் முற்பகுதியில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மத்திய கல்லூரி ஒரு அணியாக பங்குகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய விளையாட்டு தினமாக ஏப்ரல் 06ஆம் திகதி பிரகடனம்

(கொழும்பு)

தேசிய விளையாட்டு தினமாக ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய விளையாட்டை நகரிலிருந்து கிராமங்களுக்குக் கொண்டு செல்லும் நோக்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகிந்த சிந்தனை கோட்பாட்டுக்கு இணங்க இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக விளையாட்டு கலாசாரத்தை உருவாக்குவதற்காக ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் தேசிய விளையாட்டை கிராமத்துக்குக் கொண்டு செல்வதற்காக பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம சேவகர் பிரிவுகள் மட்டத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நகர்ப்புறங்களை அண்டி நடை பயிற்சிகளுக்காக ஒழுங்கைகள் ஏற்படுத்தப்படும். வேலைத் தளங்களில் உடற் பயிற்சிக்கு வசதிகள் செய்யப்படும்.

பாடசாலைகளிலும் விளையாட்டை ஊக்குவிப்பதற்காக விளையாட்டு, கல்வி, உயர் கல்வி அமைச்சுக்களுடன் இணைந்து பணிகள் முன்னெடுக்கப்படும்.

விளையாட்டு வரலாற்றில் விளையாட்டு பொருளாதாரத்தை உருவாக்க பங்களிப்பு வழங்கி, சுற்றுலாத் துறை மூலம் விளையாட்டுக்கு புதிய வலுவை வழங்கும் நோக்குடன் கடலோர விளையாட்டு, நீர் விளையாட்டு, மோட்டார் வாகன ஓட்டப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்படும்.

இதன் மூலம் அந்நியச் செலாவணியை கொண்டு வரும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையின் சகல மட்டங்களிலிருந்தும் வீர,வீராங்கனைகளை இலகுவாக இனங்காண முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என விளையாட்டு அமைச்சகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2ஆவது சுற்றில் பற்றீசியன், யாழ். சென்றல்




கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு பற்றீசியன், யாழ். சென்றல் அணிகள் முன்னேறியுள்ளன.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இரு போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. பி. அணியும் பற்றீசியன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் கே.சி.சி.சி. பி அணி 28 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிருஷன் 19, டிறுசன் 14, தனலக்ஷன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டார்வின் மூன்று, லிவிங்ரன், தனுஷன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 112 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன் அணி 17 ஓவர்கள் நிறைவில் இரு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மனோஜ் ஆட்டமிழக்காது 33, ரியூடர் 31, டார்வின் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிருசன், கனுசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் பற்றீசியன் அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் யாழ். சென்றல் அணியும் யங்ஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். சென்றல் அணி பாலேந்திராவின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். சென்றல் அணி 30 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பாலேந்திரா 57, கலிஸ்ரன் 43, அன்ரூ 37, விஸ்ணு 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விஜிதரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 256 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யங்ஸ்ரார் அணி சுபாதீஸின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யங்ஸ்ரார் அணி 24.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் விஜிதரன் 30, சுஜன் 24, ஜனகன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுபாதீஸ் மூன்று, மில்லர், யசிந்தன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் யாழ். சென்றல் அணி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (93)

# சித்த வைத்தியர்களுக்கு ஏன் இந்த ஆங்கில மோகம்?

– ந.பரமேஸ்வரன் –

யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் சித்த வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றை விட கைதடியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை இயங்கி வருகிறது.

இந்த வைத்தியசாலைகளில் சித்த மருத்துவத்துறையில் பட்டம் பெற்ற மருத்துவர்கள் மருத்துவர்களாகக் கடமையாற்றி வருகின்றனர். இவ்வாறு கடமையாற்றும் சித்த மருத்துவர்கள் நோயாளிகளுக்குரிய மருந்துச் சீட்டுகளை ஆங்கிலத்திலேயே எழுதிக்கொடுக்கின்றனர். எதற்காக சித்த மருத்துவர்கள் ஆங்கிலத்தில் மருந்துச் சீட்டுகளை எழுதிக் கொடுக்கின்றனர்?

சித்த வைத்தியம் என்பது சித்தர்களின் வைத்தியம். குறுமுனி அகத்தியன் முதல் பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டு வரை பல்வேறு காலப்பகுதிகளில் தமிழ் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வாழ்ந்த சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளியதே சித்த வைத்தியம். சித்தர்களின் வைத்தியம் சித்த வைத்தியம்.

சித்தர் பாடல்கள் யாவும் தமிழிலேயே உள்ளன. உதாரணத்திற்கு ஒன்று

“காலை விளாங்கனி
கடும் பகல் சுக்கு
மாலை கடுக்காய்
மண்டலம் சாப்பிட
கோலையூன்றிக் குனிந்து நடந்தவர்
கோலை வீசி நிமிர்ந்து நடப்பரே”

இது தான் பாடல்.




அத்துடன் சித்த வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளிகளை சித்த மருத்துவர்கள் ஸ்டெதஸ்கோப் பாவித்து பரிசோதனை செய்கின்றனர். ஸ்டெதஸ்கோப்பைக் கண்டு பிடித்தவர் யார் போகரா அல்லது வேறு யாராவது சித்தர்களா? நாடி சாஸ்திரம் என்று ஒரு நோயை அடையாளம் காணும் வைத்திய முறை இருப்பது யாழ்ப்பாணத்திலுள்ள சித்த வைத்தியர்களுக்கோ யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ விரிவுரையாளர்களுக்கோ தெரியாதா?

நாடி பிடித்துப் பார்த்தே நோயை அறிந்து கொள்ளக் கூடிய பரம்பரை வைத்தியர்கள் பலர் அண்மைக்காலம் வரை யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளனர். நாடி பிடித்துப் பார்த்தே நோய்முற்றிய அல்லது படுக்கையிலிருக்கும் நோயாளியின் மரணத்தைத் துல்லியமாகக் கணிப்பிடக்கூடிய பரம்பரை மருத்துவர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளனர்.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் அரச மருத்துவர்கள் கூட ஸ்டெதஸ்கோப் மூலம் நோயாளியை பரிசோதனை செய்தாலும் ஒரு முறை கையையும் பிடித்தே பார்ப்பார்கள்.

அமெரிக்காவிலிருந்து வந்து மேலைத்தேச மருத்துவத்தை யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்த மருத்துவர் கிறீன் கூட தமிழிலேயே தனது நடவடிக்கைகளை மேற்கொண்டார். தமிழில் மருத்துவம் போதித்து மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்கியதுடன் மருத்துவச் சீட்டுக்களையும் தமிழிலேயே எழுதிக்கொடுத்தார். அத்துடன் உடற்கூற்று மருத்துவம் (Anotomy) தொடர்பாக 400 பக்கங்களை கொண்ட ஒரு நூலையும் தமிழில் எழுதியுள்ளார்.

இப்போது கேள்வி என்னவென்றால் யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சித்த மருத்துவர்களுக்கு தமிழ் தெரியாதா?

# சின்னச் சின்ன...

## ஃபேஸ்புக், ட்விட்டரை வெறுக்கும் இயக்குநர்!

ஹொலிவுட்டில் டெர்மினேட்டர், டைட்டானிக், அவதார் போன்ற பிரமாண்ட படங்களை உருவாக்கி, “இப்படியெல்லாம் கூட படம் எடுக்க முடியுமா...” என, சினிமா ரசிகர்களை ஆச்சரியப்பட வைத்தவர் இயக்குனர் ஜேம்ஸ் கமரூன்.

நவீன தொழில் நுட்பங்களை திரைப்படங்களில் புகுத்துவதற்கு முன் உதாரணமாக செயற்பட்டவர். ஆனால், இவருக்கு, “பேஸ்புக், ட்விட்டர்” போன்ற சமூக வலைத் தளங்கள் அறவே பிடிக்காதாம்; அவற்றை பயன்படுத்தவும் மாட்டாராம். இதுகுறித்து, அவர் கூறுகையில், “தொழில் நுட்பங்களை நமக்கு அடிமையாக்க வேண்டுமே தவிர, நாம், அதற்கு அடிமைப்பாகக் கூடாது. வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் அனுபவிப்பதற்காகவே மனிதராகப் பிறந்துள்ளோம். அதை இப்படி சமூக வலைத் தளங்களில் மூழ்கி நேரத்தை வீணடிப்பதை விட, மனிதனாக பிறக்காமலேயே இருந்திருக்கலாம்...” என, காட்டமாக கூறுகிறார்.



## ஒரு பாடலுக்கு குத்தாட்டம் வேண்டாம் என்று விலகியவர்!

பொலிவுட் நடிகை முமைத்கான் ஒரு பாடலுக்குக் கவர்ச்சி நடனம் ஆடும்படி கேட்டுவரும் தயாரிப்பாளர்களிடம் இருந்து தப்பிக் கொள்ள எடுத்த விளையாட்டான முயற்சி அவரை உலகப் புகழுக்குக் கொண்டு சென்றுள்ளது. கொலம்பியாவைச் சேர்ந்த பிரபல பாடகி ஷகிராவின் அல்பத்தைப் பார்த்து அதே பாணியில் தன் இசை மற்றும் நடனத் திறமையை வெளிப்படுத்த எண்ணினார் முமைத்கான். “அடிக்ஷன்” என்ற மியூசிக் அல்பத்தை உருவாக்கி இருக்கிறார். இதில் முமைத்கான் ஷகிராவைப் போலவே சொந்தக்குரலில் பாடி ஆடியிருக்கிறார். பெரும் பட்ஜெட்டில் உருவாகியுள்ள இந்த அல்பத்துக்கு சர்வதேசப் புகழ்பெற்ற டி.ஜே. சீஸ்வுட் இசையமைத்துள்ளார். இணையத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்த அல்பத்தை இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டுள்ளனர். பரவலான பாராட்டுகளால் மகிழ்ந்துள்ள முமைத்கான், இனி மியூசிக் அல்பங்களில் கவனம் செலுத்தப்போவதாக அறிவித்துள்ளார்.




## ஒரே ஆண்டில் 7,780 கோடி சம்பாதித்த ஹொலிவுட் தாரகை!

திரைப்படங்களில் நடித்ததன் மூலம், அதிகம் சம்பாதித்த நடிகை என்ற பெயரை, ஹொலிவுட்டின் அழகுப் புயல் சாண்ட்ரா புல்லக் தட்டிச் சென்றுள்ளார். கடந்தாண்டில் மட்டும், 7,780 கோடி ரூபாயை, இவர் சம்பாதித்துள்ளதாக, “ஃபோர்ப்ஸ்” பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஏழு ஒஸ்கார் விருதுகளை தட்டிச் சென்ற, “கிராவிட்டி” படத்தில் நடித்தது தான், சாண்ட்ராவின் புகழுக்கு காரணமாம். இத்தனைக்கும் சாண்ட்ராவுக்கு, 50 வயதாகி விட்டது. கடந்த, 2012இல், அதிகம் சம்பாதித்த நடிகைகளின் பட்டியலில் முதலிடத்தில் இருந்த ஏஞ்சலினா ஜோலி, கடந்தாண்டில், ஐந்தாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

## பாராட்டை விரும்பாத சிறுமியின் மனிதாபிமானம்!

சீனாவின் ஹுனான் மாகாணத்தில் வசிக்கும், ஹீ கிஜ் ஜியாவு என்ற, 13 வயதுச் சிறுமி, தன் கருணை உள்ளத்தால், இப்போது உலகம் முழுவதும் பிரபலமாகி விட்டாள். இவளின் பக்கத்து வீட்டில் வசிக்கும் ஹீயுங் ஹு என்ற சிறுமி போலியோவால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாத நிலையில் இருக்கிறாள். இருவரும், சிறு வயதில் இருந்தே இணை பிரியாத தோழிகள்.

நடக்க முடியாத தோழியை, கடந்த மூன்று ஆண்டுகளாக, தன் முதுகில் சுமந்தபடி, பள்ளிக்கு அழைத்துச் செல்கிறாள் ஜியாவு. இதுகுறித்த செய்தி, சமூக வலைத்தளங்களில் வெளியாகியதால், உலகம் முழுவதும் இருந்து, ஜியாவுக்கு பாராட்டுகள் குவிகின்றன. ஆனால், “என் தோழிக்காக இதைச் செய்கிறேன் இதற்கு எதற்கு பாராட்டு?” என அப்பாவியாக கேட்டு, அனைவரையும் ஆச்சரியப்படுத்துகிறாள், ஜியாவு.









## “தெனாலிராமன் கதைகள் ஓர் ஆய்வு“ நூலிலிருந்து:

கிருஷ்ண தேவராயரின் அரசவையில், தலைசிறந்த எட்டு புலவர்கள் இருந்தனர். இவர்களுக்கு, “அஷ்ட திக் கஜங்கள்” என்று பெயர். அவர்கள் அல்லசானி பெத்தண்ணா, நந்தி திம்மண்ணா, தூர்ஜதி, மாதயகாரி, மல்லண்ணா, அய்யலராஜு, ராமபத்ரா, தெனாலி ராமகிருஷ்ணா ராமராஜ பூஷணா, பிங்கலி சூரண்ணா ஆகியோர். இவர்களுள் ஒருவரான தெனாலி ராமகிருஷ்ணா தான் தமிழிலும் பிரபலமடைந்துள்ள, தெனாலி ராமன். நம்மத்தியில் இவரைப்பற்றி வழங்கும் பல கதைகள், சிறுவரை மகிழ்விப்பதற்காக எழுதப்பட்ட கற்பனைக் கதைகளே!

## உலகின் மிக நீளமான வண்ண ஓவியம்!


அமெரிக்காவின் மிக்சிகன் நகரில் உள்ள கலமாஷு என்ற பகுதியில் குர்மெஜ்சிங் என்ற இந்தியர் உலகின் மிகப்பெரிய வண்ண ஓவியத்தை வரைந்து சாதனை புரிந்துள்ளார். இந்த ஓவியத்தின் நீளம் 3444.91 மீற்றர் (11302 அடி 4.1 அங்குலம்)

இவருடைய இந்த ஓவியத்தை ட்ரிடன் ரெக்ஸ்டைல்ஸ் என்ற நிறுவனமும், ஒலியரி பெயின்ட்ஸ் என்ற நிறுவனமும் இணைந்து அனுசரணை செய்துள்ளன!

## பொலிசுக்கு வேலை இல்லை!

150 ஆண்டுகளில் மக்களுக்கு எதிராக காவல் துறையைப் பயன்படுத்தாத ஒரே புரட்சி அரசு கியூபாதான். கண்ணீர் புகைக் குண்டு, ரப்பர் தோட்டாக்கள், மோப்ப நாய்கள் இவை கியூபா மக்கள் அறிந்திராதவை.





## இது தெரியுமா?

பிரான்ஸ் நாட்டை ஆண்ட மாவீரன் நெப்போலியன் பிரெஞ்சுக்காரர் அல்ல; கார்சிகன் இனத்தைச் சேர்ந்தவர். இரண்டு உலகப்போர்களுக்கு இடையே ஜேர்மனியை ஆண்ட ஹிட்லர் ஜெர்மனியர் அல்ல; ஆஸ்திரியர்.

## புயல்களுக்குப் பெயரிடல்!

இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் (1939-1945) புயல்களை அடையாளம் காண்பதற்கு, புயல்களுக்கு பெண்களின் பெயர்களை இடுவது வழக்கம். அழிவை ஏற்படுத்தும் புயலுக்கு பெண்களின் பெயர்களைச் சூட்டுவதா என்று பெண்ணியவாதிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால், 1978 முதல் ஆண்களின் பெயர்களும் சூட்டப்படுகின்றன.

# செப்ரெம்பர் மாதத்தில்...




## பிரபலங்களின் பிறந்த தினங்கள்

9, 1899 - கல்கி கிருஷ்ணமூர்த்தி, பிரபல தமிழ் எழுத்தாளர்.

9, 1828 - லியோ டால்ஸ்டாய் - ரஷ்ய எழுத்தாளர்.

15, 1909 - அண்ணாதுரை - தமிழக முன்னாள் முதல்வர்.

17, 1709 - சாமுவேல் ஜோன்சன் - ஆங்கில அகராதி உருவாக்கியவர்.

17, 1879 - தந்தை பெரியார்.

22, 1791 - மைக்கேல் ஃபரடே - டைனமோ கண்டுபிடித்த விஞ்ஞானி.

25, 1952 - கிறிஸ்டோபர் ரீவ் - சூப்பர்மேனாக நடித்த ஹொலிவுட் நடிகர்.

27, 1933 - நாகேஷ் - நகைச்சுவை நடிகர்.

## நினைவு தினங்கள்

2, 1969 - ஹோ சி மின் - வியட்நாம் தலைவர்.

5, 1997 - அன்னை தெரஸா.

9, 1976 - மா சே துங் - சீனத் தலைவர்.

11, 1921 - மகாகவி பாரதியார்.

17, 1979 - நடிகவேள் எம்.ஆர்.ராதா.

23, 1939 - சிக்மண்ட் ஃபிராய்ட் - உளவியலின் தந்தை.

29, 1913 - ருடோல்ப் டீசல் - டீசல் என்ஜினை உருவாக்கியவர்.

## செப்ரெம்பரில் சுதந்திரம் கொண்டாடும் நாடுகள்

1 லிபியா
2 வியட்நாம்
3 கட்டார்
7 பிரேசில்
9 பல்கேரியா
15 எல்சல்வடோர், குவாதமாலா, கோஸ்டாரிகா, ஹொண்டுராஸ், நிகரகுவா.
16 மெக்ஸிகோ, பப்புவா நியூகினியா
18 சிலி
21 மோல்டா
22 மாலி
23 சவுதி அரேபியா
26 யேமன்
30 பொட்ஸ்வானா

## முக்கிய நிகழ்வுகள்

1, 1939 இரண்டாம் உலகப்போர் தொடங்கியது.

11, 2001 அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத்தின் மீது விமானத் தாக்குதலில் 2,974 பேர் மரணம். பலர் காயமடைந்தனர்.

13, 1906 முதன்முதலாக ஐரோப்பாவில் ஆகாய விமானம் பறந்தது.

25, 1609 கலிலியோ தொலைநோக்கி உருவாக்கி, வியாழன் கோளின் 4 துணைக்கோள்களைக் கண்டுபிடித்தார்.


28, 1928 அலெக்சாண்டர் ஃபிளமிங் பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தார்.

30, 2003 விக்கி பீடியா தமிழில் தொடங்கியது.

## முக்கிய தினங்கள்

2 உலக தேங்காய் தினம்
4 உலக சொக்ளேற் தினம்
8 உலக எழுத்தறிவு தினம்
13 உலக முதலுதவி தினம்
15 சர்வதேச ஜனநாயக தினம்
16 சர்வதேச ஓசோன் வாயு தினம்
18 உலக அறிவாளர் தினம்
21 சர்வதேச அமைதி தினம்
26 சர்வதேச கடல்சார் தினம்
27 உலக சுற்றுலா தினம்
28 காது கேளாதோர் தினம்
29 உலக இதய தினம்.

# எட்டு ஆண்டுகளாகப் பயணிக்கும் விண்கலம்




நாஸா அனுப்பிய ஒரு விண்கலம் எட்டு ஆண்டுகளாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறது. 2006 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட நியூ ஹொரைசன்ஸ் எனப்படும் அந்த விண்கலம் போகிறது, போகிறது, போய்க்கொண்டே இருக்கிறது. அது ஒன்றும் ஆமை வேகத்தில் செல்லவில்லை. மணிக்கு சுமார் 65 ஆயிரம் கிலோ மீட்டர் வேகத்தில் பறந்து கொண்டிருக்கிறது

அது இன்னும் சுமார் ஓர் ஆண்டு பயணம் செய்தாக வேண்டும். அது போய்ச் சேர வேண்டிய இடம் புளூட்டோ. சூரிய மண்டலத்தின் எல்லையில் அது உள்ளது.

ஆளில்லா விண்கலமான நியூஹொரைசன்ஸ் இப்போது நெப்டியூன் என்னும் கிரகத்தின் சுற்றுப்பாதையைக் கடந்து சென்றுள்ளது. அந்த அளவில் அது 440 கோடி கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து சென்றுள்ளது. இன்னும் சுமார் 37 கோடி கிலோ மீட்டர் பயணத்துக்குப் பிறகு நியூஹொரைசன்ஸ் அடுத்த ஆண்டு ஜூன் 14 ஆம் தேதி புளூட்டோவை சென்றடையும்.

சூரிய மண்டலத்தில் புளூட்டோவையும் சேர்த்துக் கொண்டால் ஒன்பது கிரகங்கள் உள்ளன. நாஸா முன்னர் அனுப்பிய ஆளில்லா விண்கலங்கள் வியாழன், சனி, யுரேனஸ், நெப்டியூன் ஆகிய கிரகங்களை நெருங்கிச் சென்று படங்களைப் பிடித்து அனுப்பின. அந்த கிரகங்களைப் பற்றிய தகவல்களையும் அனுப்பின. புளூட்டோ ஒன்று தான் பாக்கியாக இருந்தது. சூரிய மண்டலத்தில் உள்ள கிரகங்களில் புளூட்டோ தான் மிகச் சிறியது.

அண்மைக் காலம் வரை புளூட்டோ ஒரு கிரக்மாகக் கருதப்பட்டது. இப்போது அது குட்டிக் கிரகம் என "பதவி இறக்கம்" செய்யப்பட்டுள்ளது.

சக்திமிக்க டெலஸ்கோப் மூலம் பார்த்தாலும் புளூட்டோ பற்றி விரிவாக அறிந்து கொள்ள இயலவில்லை. ஆகவே புளூட்டோ பற்றி நியூஹொரைசன்ஸ் தெரிவிக்கக்கூடிய தகவல்களை அறிய விஞ்ஞானிகள் மிக ஆவலாக இருக்கின்றனர்.

நியூஹொரைசன்ஸ் விண்கலம் புளூட்டோவை ஆராய்ந்த பின்னர் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும். புளூட்டோவுக்கும் மிக அப்பால் வால் நட்சத்திரங்கள் அடங்கிய குய்பெர் வட்டாரத்துக்கும் அந்த விண்கலம் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னர் வியாழன் கிரகத்துக்கும் அப்பால் இருக்கும் கிரகங்களை ஆராய்வதற்காக அனுப்பப்பட்ட பயனியர்-1 பயனியர்-2, வொயேஜர் -1, வொயேஜர் -2 ஆகிய ஆளில்லா விண்கலங்கள் கோடானு கோடி கிலோமீட்டர் தொலைவைத் தாண்டி தொடர்ந்து சென்று கொண்டிருக்கின்றன.



பழந்தமிழக அரசியலில் அரபு நாட்டுக் குதிரைகள் பிரதான அங்கமாக விளங்கின. அவற்றைக் கொண்டு வந்து பழக்கி, பேணி, தமிழ் மன்னர்களுக்குப் பயன்படச் செய்த அரபிகள் "இராவுத்தர்கள்" எனப் பெயர் பெற்றனர். அவர்கள் தமிழர்களோடு மண உறவு கொண்டு தமிழ்க் குடிமக்களாகவே மாறியது வரலாற்றில் சிறப்பு அம்சமாகும்.

குதிரைகளின் வண்ணம், வடிவு, தன்மை ஆகிய இயல்புகளைக் கொண்டு அவற்றுக்கு பாடலம், கோடகம், கிவுளி, வண்ணி, பரி, கந்துகம், புரவி, கனவட்டம், துரதம், கற்சி, அச்சுவம், துரங்கம், யவனம், குரகதம், வையாளி எனப் பல் பெயர்கள் தமிழ் இலக்கியங்களில் சூட்டப்பட்டுள்ளன.

திருவிளையாடற் புராணத்தில் பல வகையான பரிகளையும் அவற்றின் இயல்புகளையும் அவை எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவை என்பதையும் விவரமாகக் குறிப்பிடுவதுடன் யவனம் என்ற வகைப் புரவி மக்கத்தில் உள்ளவை என பாகுபடுத்திப் பாடியுள்ளார்.

# குதிரை ராவுத்தனாக வந்த கடவுள்!

தமிழ் மன்னர்களின் நால்வகைப் படைகளில் குதிரைப்படை என்பது ஒரு பிரிவு என்பது எல்லோருக்கும் தெரியும். சோழர் படைகளுக்கான குதிரைகள் பாரசீக, அரபு நாடுகளில் இருந்து பெரும்பாலும் கொங்கண, கேரளக் கடற்கரைப் பட்டினங்களில் கரை இறக்கப்பட்டு கொங்கு நாடு வழியாக சோழநாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. இத்தகைய வணிகத்தில் ஈடுபட்டுள்ளவர்களை "குதிரைச் செட்டிகள்" என கல்வெட்டுகளும் இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.


பிற்காலப் பாண்டியப் பேரரசு காலத்தில் ஆண்டுதோறும் பதினாயிரம் குதிரைகள் காயல்பட்டினம், தேவி பட்டினம் ஆகிய துறைகளில் கரை இறக்கப்பட்டன. அங்கிருந்து அவை நெல்லைக்கும், மதுரைக்கும் நடத்திச் செல்லப்பட்டன.

இந்தக் குதிரைகளைப் பாண்டியனுக்காகப் பெற்று வரச் சென்ற வாதவூரர், வரலாற்றில் இறைவன் "கோட்டமிலா மாணிக்கவாசகர்முன் "குதிரை ராவுத்தனாக" வந்து நின்றதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் திருப்பெருந்துறையில் உள்ள ஆலயத்தில் முகப்பு மண்டபம், குதிரை வீரர் சிற்பங்களுடன் அமைக்கப்பட்டு இருப்பதுடன், "இராவுத்தர் மண்டபம்" என வழங்கப்படுதல் குறிப்பிடத்தக்கது!

["வரலாற்று வெளிச்சத்தில் போர்த்துக்கீசியர்கள்" நூலில்]

உலகின் மிகச் சிறந்த விமான நிலையம் என்ற பெருமையை, சிங்கப்பூரில் உள்ள சாங்கி விமான நிலையம் தட்டிச் சென்றுள்ளது. இதை விமான நிலையம் என்று சொல்வதை விட, மினி சொர்க்கம் என அழைக்கலாம். அந்த அளவுக்கு அழகும், பிரமாண்டமும் இங்கு கொட்டிக் கிடக்கிறது. இங்கு மூன்று முனையங்கள் உள்ளன. ஆண்டுக்கு ஆறு கோடி பயணிகளை கையாளும் திறன் இந்த விமான நிலையத்துக்கு உண்டு. திரையரங்குகள், பூங்கா, குழந்தைகள் பொழுது போக்குவதற்கான வசதிகள், நீச்சல் குளம், உடற் பயிற்சி கூடம், கண்களை கவரும் மின் விளக்குகள் என, இங்கு இல்லாத வசதிகளே இல்லை. இங்கு வரும் வெளிநாட்டு பயணிகள், "ஒரு விமான நிலையத்தை இப்படி கூட அமைக்க முடியுமா..." என, ஆச்சரியத்தில் வாய் பிளக்கின்றனர்.



# இப்படியும் விமான நிலையம்!

# எதிர்காலம் தொடர்பில் மக்களிடம் தெளிவான சிந்தனை இருக்கவேண்டும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மக்களின் வாழ்வில் முன்னேற்றம் என்பது மிகவும் அவசியமானது எங்கள் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நல்ல வளமான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அது எங்கள் எல்லோரிடமும் உள்ள பொறுப்பு. மக்கள் மத்தியில் தொடர்ந்தும் அவலத்தை ஏற்படுத்தி அதில் அரசியல் செய்ய இங்கே ஒரு கும்பல் திரிகிறது. இவர்கள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் மக்களிடம் தங்களின் எதிர்காலம் தொடர்பில் தெளிவான சிந்தனை இருக்க வேண்டுமென ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் கேட்டு கொண்டார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சி சமுர்த்தி வங்கி பிரிவிற்குட்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் 'உதவும் கரங்கள்' வாழ்வாதார கடன்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு கடன்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேறிய பின்னர் பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்டு வந்த வாழ்வாதார திட்டங்கள் எல்லாம் தற்போது முடிவுக்கு . வந்துவிட்டன. ஆனால் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழான வாழவாதார திட்டங்கள் நிரந்தரமானவை இலகுவானவை மக்கள் இந்த திட்டத்தின் கீழ் இலகுவாக கடனகளைப் பெற்று சுயதொழிலை மேற்கொள்ளமுடியும்.

எங்கள் மாவட்டத்திற்கு தாமதமாக சமுர்த்தி திட்டம் நடைமுறைக்கு வந்தாலும் அதிலிருந்து அதிக பயனைப் பெறும் வகையில் அதிக நிதி ஒதுக்கீட்டை நாம் அரசிடம் இருந்து கோரியிருக்கின்றோம். அத்துடன் இவ்வாறான திட்டங்களின் பயன் எல்லோருக்கும் சென்றடைய வேண்டும். இதன் மூலம் எமது மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டு வளமான வாழ்வைப் பெறவேண்டும் என்றார்.

கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்கள் வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் வலயம் 06 இற்கான நுண் நிதி பணிப்பாளர் திருமதி பிறைசூடி, கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இப்ரான், கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பாளர் சிவகுமார், கிராம அலுவலர்களான ஜோன் ஜெகநாதன், இந்திரன் சத்தியநாதன் மற்றும் சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவி சுபத்திரா, வட்டக்கச்சி சமுர்த்தி வங்கி முகாமையாளர் தகிதரன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முரசின் இன்றைய பலன்

(03.09.2014 புதன்கிழமை)



ஐய வருஷம் ஆவணி மாதம் 18 ஆம் திகதி.
சித்தம் / நவமி.
கேட்டை நட்சத்திரம் பி.ப. 01.58 வரை. பின் மூலம்.
இராகு காலம் 12.05 - 01.35 வரை. சுபநேரம் 04.35 - 06.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழிலில் ஏற்பட்ட போட்டியை முறியடிக்க புதிய யுக்தி முறையைக் கையால், நோய்வாய்ப்பட்டிருந்த தாயா ரின் நலம் மேம்படுவதினால் ஆறுதல். |
| ரிஷபம் | சர்ப்பக்கிரகங்களால் நன்மைதரும் நிலையில் காணப்படுவதினால் புதியன தொடங்குதல், திருமண ஏற்பாடுகள் மேற்கொள்ளல். |
| மிதுனம் | சகோதர மத்தியில் நிலவிய ஒற்றுமை சொத்துப்பங்கீட்டால் பாதிப்படைதல். |
| கடகம் | பெற்றோரின் தேகநலம் பாதிப்படைவதினால் பயண முயற்சியை கைவிடல், சட்டவிரோத மின் பாவனையால் தண்டம் பெறல். |
| சிம்மம் | தம்பதியரிடையே சர்ச்சை ஏற்படல், சிறு விபத்து ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. |
| கன்னி | சுபகாரியம் நிகழ்வினை நடாத்த கடன்பெற நேரிடல், சில நாட்களாக தம்பதியர் மத்தியில் நிலவியிருந்த மனத்தாங்கல் அகலல். |
| துலாம் | மேலதிகாரிகளின் ஏற்பட்ட விரிசல் இடமாற்றம் பற்றிய அச்சம் ஏற்படல், மீள் நியமனம் பெற விண்ணப்பித்தமை சாதகமான பதிலைத்தருதல். |
| விருச்சிகம் | கிரகநிலைகள் சாதகமாக இருப்பதினால் கைவிட்டிருந்த வெளியூர் பயணத்தில் கால்பதித்தல், பரீட்சைச் சித்தியினால் வேலை வாய்ப்பு பதவி உயர்வு கிட்டல். |
| தனுசு | நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த நிலுவை கிடைத்தல், மக்களின் உயர்வைக்கண்டு மகிழ்ச்சியும் பெருமையும் ஏற்படல். |
| மகரம் | திருமணம் சம்பந்தமாக இனிய செய்திவந்ததால் மகிழ்வுறல், பங்குத்தொழிலை முறித்துக் கொண்டு தனித்தியங்க விரும்புதல். |
| கும்பம் | நோய் குணமடைய கிரக சாந்தி செய்ய மனம் விளைதல், வெளிநாட்டினின்றும் உறவினர் வருகையால் மகிழ்ச்சி தக்க வைத்தல். |
| மீனம் | தொழில் வளர்ச்சிக்காக ஒரு கிளை நிறுவனம் திறக்க எண்ணம் மேலிடல், வெளியூர் பயணத்தை முன்னிட்டு குடும்பத்தினரை விட்டுப்பிரிதல். |

## உள்ளூராட்சி சபைகளை பலப்படுத்த நிதிஉதவி


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களின் கீழ்வாழும் 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் மாதாந்தம் ஒருமில்லியன் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு ஊடாக இந்நிதியை வழங்கிறது. வடக்கில் நலிவுற்ற சபை என்றில்லாது அனைத்து சபைகளுக்கும் படிப்படியாக ஒரு மில்லியன் ரூபா வீதம் சபைகளை பலப்படுத்தும் நோக்கில் வழங்கப்பட்டு வருகின்றது.

முதற்கட்டமாக வடக்கில் 12 உள்ளூராட்சி சபைகளுக்கு கடந்த மூன்று மாதகாலமாக ஒரு மில்லியன் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. யாழ்.மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி சபைகளுக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. விபரங் கள் கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (92)

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று பூங்காவனத் திருவிழா



## கந்தனுக்கு திருக்கல்யாணம்

கோவணத் துண்டுடன் பழனியில் நின்ற
கோலமாத் தொண்டை மானாற்றில்
ஆவண முகமூடி மந்திரம் இன்றி
ஆதரி வடிவேல னன்றோ!


ஆற்றங் கரையது குடிசை ஒன்றில்
ஆரவா ரமேதும் இல்லா
தோற்றம் பெற்ற தொண்டை மானாறு
தானருள் சந்நிதி வேலா!

பத்தாம் திருவிழா திருக்கல் யாணம்
பதியதும் சந்நிதி தன்னில்!
கொத்தாகப் பக்தர் கூட்டம் சேர்வர்
கொடியே றியதும் சந்நிதி!

ஆவணியில் மூவைந்து தினங்கள் விழாவும்
ஆரவார மேவீதி தோறும்!
கோவணக் கந்தன் கோலமும் பலவே
கோச்சும் ஆளுமை காணும்!

'கவிமணி' பரமகவி.

## தெல்லிப்பளை துர்க்கையம்மனை கவிதையால் துதிசெய்வோம்



## துர்க்கா புரியில் தூயோளின் வீடு

துர்க்கா புரியிலோர் தூயோளின் வீடு
துணைவேண்டித் தாயாளை நாடிநீ ஓடு
சொர்க்காபுரித் தலம் தன்னையே நாடு
சொர்ப்பன சுந்தரி அவள்முன்னே கூடு
கற்பனைக் கெட்டானைக் கண்டுநீ பாடு
கருத்தூன்றி அவளடி கண்டிடத்தேடு
நர்த்தன நாயகி நாடியே வருவாள்
நல்லருள் சுரந்துமே நாளெல்லாம் காப்பாள்!

ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம். மூளாய்.

(தெல்லிப்பளை துர்க்கையம்மனுக்கு இன்று ஏழாம் நாள் திருவிழா)

# கல்விஅமைச்சின் சுற்றுநிருபத்தை மீறி முல்லையில் ஆசிரிய இடமாற்றம்

## - விசனம் தெரிவிக்கும் இலங்கை தமிழர் ஆசிரியர்சங்கம் -

இலங்கை அரசாங்க ஸ்தாபன விதிக்கோவையையும் கல்வி அமைச்சின் 2007/20 இலக்க சுற்றுநிருப்த்தையும் மீறி முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆசிரிய இடமாற்றங்கள் ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும் உடனடியாக அவற்றை இரத்துச் செய்யுமாறு இலங்கை ஆசிரியர் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சி மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதி உத்தரவை மீறி முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெற்றுள்ளன இதைவிட ஆசிரிய இடமாற்றங்கள் எதுவும் வருடத்தின் இடைநடுவில் செய்யக்கூடாது என ஜனாதிபதி விடுத்த உத்தரவையும் மீறி இந்த இடமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் வடமாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரைச்சந்தித்து தாம் விசனததைத் தெரிவித்துள்ளதுடன் உடனடியாக அவற்றை இரத்து செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளோம். முல்லைத்தீவு கல்வி வலயம் யுத்த காலத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கல்விவலயம் மட்டுமன்றி அங்குள்ள அதிபர்களும், ஆசிரியர்களும் கடுமையான பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள்.

இதே வேளை அங்கு குழப்பமானதொரு இடமாற்றத்தை அமுல்படுத்தி மாணவர்களின் கல்வி பாதிப்படைய இடமளிக்க வேண்டாமென்று இலங்கைத்தமிழர் ஆசிரியர் 'சங்கத்தின் பொதுச்செயலாளர் கல்வி அமைச்சுச்செயலாளரைக் கேட்டுக்கொண்டார். அதை ஏற்றுக்கொண்ட கல்வி அமைச்சின் செயலாளர் உடனடி யாக இரத்து செய்வதாக உறுதியளித்தார். முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து இதுவரை மூன்று கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம் மற்றும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அதற்குப் பதிலாக கல்வி நிர்வாக சேவையின் மூன்றாந் தரத்தில் உள்ள ஒருவர் தற்போது கடமையில் உள்ளமையும் குறிப்பிடதக்கது.

இதைவிட ஆசிரிய இடமாற்றத்திற்கு விண்ணப்பம் செலுத்தச் சென்ற ஆசிரியர்களின் விண்ணப்பங்களை சில அதிபர்களும் வலயக்கல்விப் பணிப்பாளர்களும் ஏற்க மறுத்து ஆசிரியர்களைத் திருப்பி அனுப்பியுள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை பற்றியும் கல்வி அமைச்சுச் செயலாளரிடம் எடுத்துரைக்கப்பட்ட போது அனைவரும் விண்ணப்பங்கள் கொடுப்பதற்கு தகுதியுள்ளவர்கள் அவர்களது விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தலைத் தாம் வழங்குவதாகவும் கூறியுள்ளார்.

அதேவேளை வலய' இடமாற்றச் சபையின் தீர்மானங்கள் மாகாணமட்டத்தில் நிராகரிக்கப்படுகின்றமை தொடர்பாகவும் செயலாளரிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதியநிர்வாகத்தெரிவு

(வேலணை)

வேலணை கமநலசேவை நிலைய நிர்வாகத்திற்குட்பட்ட வேலணை வடக்கு கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது புதிய ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது தலைவராக ம.குணசிங்கம், உபதலைவராக க.கணேசலிங்கம், செயலாளராக ஐ.நவேந்தன், உபசெயலாளராக கு.ஜெகதீஸ்வரன், தனாதிகாரியாக மு.ஜெயதீபன் மற்றும் பஞ்சலிங்கம் எஸ்.கணேசமூர்த்தி, திருமதி.அஜந்தாராமன், க.ஜெயகாந்தன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# தீவக வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான கே.என்.விந்தன் கனகரத்தினம், அ.பரஞ்சோதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தரான ஹென்றி மகேந்திரன் ஆகியோர் நேற்று யாழ் தீவுப்பகுதியில் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டனர்.

அங்கு நிலவும் குடிநீர் பிரச்சனை, பிரதேச வைத்தியசாலைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.

அதனை தொடர்ந்து ரூபா ஒரு லட்சம் பெறுமதியான மருத்துவ உபகரணங்களை புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் வைத்து நெடுந்தீவு ,நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு போன்ற பிரதேச வைத்தியசாலைகளுக்கு அந்தந்த பிரதேச வைத்திய அதிகாரிகளிடம் அன்பளிப்பாக வழங்கினர். குறித்த உபகரணங்கள் யாவும் அந்தந்த பிரதேச வைத்திய அதிகாரிகளின் விருப்பத்திற்கு அமைவாகவே கொள்வனவு செய்யப்பட்டு வழங் கப்பட்டுள்ளது. பொருட்கள் கொள்வனவிற்கான நிதியினை வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தின் பாடசாலை நண்பரும் உறவினருமான லண்டனில் வசிக்கும் நலன்விரும்பி ஒருவர் மூலம் நன்கொடையாக கிடைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# மானிப்பாய் வைத்தியசாலையில் மருந்தாளர் பற்றாக்குறை

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் ஒரே ஒரு மருந்தாளர் மட்டுமே கடமையாற்றுவதால் மருந்துகளைப் பெற்றுக் கொள்ள நோயாளர்கள் நீண்ட வரிசையில் நிற்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த அனுபவம் வாய்ந்த வைத்தியர்கள் பிரதேச வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இதையடுத்து மானிப்பாய் பிரதேச வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

மேலும் வைத்தியசாலையில் ஒரே ஒரு மருந்தாளர் மட்டும் கடமையாற்றுவதால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நோயாளர்களின் நிலைமையை கவனத்திற்கொண்டு மருந்தாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஆயுர் வேதம்



## சாப்பிடுவதற்கு முன்பும் ... சாப்பிடுவதற்கு பின்பும்!

உணவு ஜீரணமாக ஒருவகை திரவக் கசிவு உதவுகிறது. தேங்காய், மாப் பண்டங்கள், எண்ணெயில் பொரித்த பட்சணங்கள் போன்றவை கடித்து மென்று சாப்பிடக்கூடியவை. சத்து மா போன்றன உமிழ்நீர் சேர்க்கையால் நெகிழ்ந்து உட்செல்பவை. இவை வறண்ட உணவுகள். திரவம் மிக்க உணவுகளும் சில.

இவற்றைச் சேர்த்து உண்ணும்போது உணவின் இறுக்கமானது நெகிழ்ந்து கூழ் போன்ற நிலை பெறும்போது தான் ஜீரண திரவங்கள் ஒரே சீராகப் பரவி அவற்றைப் பக்குவப்படுத்த முடியும். இதற்குத் தேவையான அளவில் நீரும், அந்த நீரால் கூழ் போன்ற நெகிழ்ச்சியும் ஏற்படாமல் போனால் உண்ட உணவு செரிக்காமல் கனத்து கல் போலாகி வலியைத் தரும்.

அதனால் நீரோ அல்லது ஏதேனும் திரவமோ சிறிது சிறிதாக உண்ணும் உணவின் தன்மைக்கேற்ப சூடாகவோ அல்லது உடல் சூட்டிற்கேற்பவோ சாப்பிட வேண்டும்.

அதிகமான திரவப் பொருட்களைச் சாப்பிட்டால், அது ஜீரண திரவத்தை நீர்க்கச் செய்து செரிமானத்தைக் கெடுத்து விடும் நிலையில், சாப்பிட்ட பின் உமிழ்நீர் போன்று சிறிது வாந்தியாக வெளியேறும்.

அதனால் திரவப் பொருட்களை அதிகம் சாப்பிடுவோர் அவற்றை உண்ணும் சமயம் வெதுவெதுப்பான நீரை உணவின் நடுவே ஒரு சிறிய அளவில் சேர்த்துக் கொள்வது நல்லது. உண்ட பிறகு நிறைய தண்ணீர் குடிப்பதையோ, உடனே படுத்துக் கொள்வதையோ தவிர்த்துவிடவும்.

உணவிற்கு சுமார் ஒரு மணி நேரம் முன்பாகவே தேநீர் மற்றும் கோப்பி போன்றவற்றைக் குடிப்பதைத் தவிர்த்துவிடுவது நலம். உணவிற்கு பிறகும் அவற்றை உடனே சாப்பிடுவதைத் தவிர்ப்பதும் நல்லதே. வயிற்றிலுள்ள பித்த ஊறலை இவை அதிகப்படுத்திவிடுவதால் உணவிற்குப் பிறகு அந்த பித்த சீற்றத்தை உமிழ்நீருடன் வாந்தியாக வெளிப்படுவதற்கு அதுவே காரணமாகலாம்.

அதுபோல உணவிற்கு பிறகும் சுமார் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் வேறு எதுவும் சாப்பிடாமல் இருப்பதும் நலமே.

வெறும் வயிற்றில் வேப்பிலை வெந்நீர் குடிப்பதால் ஒரு சில நன்மைகளை பெறலாம். வயிற்றிலுள்ள அல்சர் புண்ணை ஆற்றக் கூடியது. இலைக்காம்புகள் வயிற்றிலுள்ள தேவையற்ற புழு, பூச்சி களை அழிக்கக் கூடியவை. தோல் உபாதையை நீக்கும், பித்த காய்ச்சலைக் குணப்படுத்தக் கூடியது என்று "கையதேவ நிகண்டு" எனும் ஆயுர்வேத புத்தகத்தில் காணப்படு கிறது.

பாவப்ரகாசர் எனும் முனிவர் வேப்பிலை கண்களுக்கு நல்லது என்றும், வயிற்றில் பித்த ஊறலைக் குறைப்பதாகவும், ஒவ்வாமை உணவினால் ஏற்படக்கூடிய விஷத்தை கல்லீரல் மற்றும் மண்ணீரல் பகுதியிலிருந்து அழிக்கக் கூடிய சக்தியை அது பெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

உண்ட பிறகு ஏற்படும் உமிழ்நீர் மற்றும் வாந்தி ஆகியவற்றை ஏற்படுத்தும் கப பித்த தோஷங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய ஆயுர்வேத மருந்துகளாகிய, மாதீபலரஸாயனம், ஜம்பீராதி பானகம், ஜீரகாரிஷ்டம், தசமூலாரிஷ்டம் போன்றவை சாப்பிடத் தகுந்தவை.

மாதத்தில் ஒருமுறை சிறிது உப்பு கரைத்த வெந்நீரைச் சாப்பிட்டு வாந்தி செய்யும் அதற்கடுத்த மாதம் ஒருமுறை கடுக்காய்தோல், உலர்திராட்சை, சுக்கு ஆகியவற்றை வகைக்கு 5 கிராம் இரவு முழுவதும் வெந்நீரில் ஊற வைத்து மறுநாள் காலை நன்றாகக் கசக்கிப் பிழிந்து அந்தத் தண்ணீரைக் குடித்து நன்றாக மலம் இளகிப் போகுமாறு செய்து கொள்வதன் மூலமாக குடல் சுத்தமடைவதால் அஜீரணப் பிரச்னைக்கு அதுவொரு தீர்வாக அமையக் கூடும்.

உணவில் முடிந்தவரை எண்ணெய்ப் பொருட்கள், பதனழிந்துபோன முதல்நாள் சமைக்கப்பட்ட உணவு வகைகள், புளிப்பு நிறைந்த தயிர், அதிக உப்பு, புலால் வகைகள் ஆகியவற்றைத் தவிர்ப்பது நலம்.

# வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப சரியான நிலைப்பாடு அவசியம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மக்கள் சரியான நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டு அதன் வழி பயணிக்கும் பட்சத்திலேயே வாழ்வாதாரத்தை மட்டுமல்லாது அவர்கள் வாழும் பகுதிகளையும் அபிவிருத்தியால் கட்டியெழுப்ப முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தும்பளை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1996 ஆம் ஆண்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் யாழ்.குடாநாட்டிற்கு வருகைதராமல் விட்டிருந்தால் வன்னியில் மக்களுக்கு என்ன அவலம் நடந்ததோ அதே போன்றுதான் இங்கும் நடந்தேறியிருக்கும்.

நாம் அரசுடனான நல்லுறவையும் இணக்க அரசியலையும் பயன்படுத்தி அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் மக்கள் சரியான நிலைப்பாட்டை எடுத்துக் கொள்ளும் அதேவேளை, இருக்கிறதைப் பாதுகாத்துக் கொண்டு அதிலிருந்து முன்னேற்றம் காண வேண்டும்.

இதைவிடுத்து உணர்ச்சிப் பேச்சுக்களுக்கு எடுபட்டு இருப்பதையும் இழக்கின்ற நிலையை ஒருபோதும் ஏற்படுத்திக் கொள்ளக கூடாது.

மக்களுடன் நின்று மக்களுக்காக பணிபுரிபவர்களை இனம் கண்டு அவர்களுக்கு மக்கள் தமது ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கும் பட்சத்தில் அவர்களது வாழ்வு மென்மேலும் சிறப்படையும் உண்மையான தேசியத்திற்காக பாடுபடுகின்றவர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தேசியம் என்பது பொய்த்தனமானது என்பதை மக்கள் தற்போது உணரத் தொடங்கியுள்ளனர்.

இதன்போது சங்கத்தின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் திட்ட அறிக்கை யினை தமக்கு சமர்ப்பிக்கு மாறும் கேட்டுக் கொண்டார்.

இதன்போது இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக் கையால் நாளாந்தம் எதிர் நோக்கும் இடர்பாடுகள் தொடர பில் அமைச்சர் தெளிவுபடுத் தினர்.

அத்துடன் வடமராட்சி கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளிலுள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் நிர்வாக அங்கத்தவர்களை தெரிவு செய்து அதனூடாக வடமராட்சி கடற்றொழில் அபிவிருத்திக் குழுவை வலுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள தொடர்பிலும் கலந்துரையாடினார்.

அத்துடன் வலிகாமம் வடக்கு பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினது பிரச்சினைகள் . மற்றும் தேவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டன.

இதன்போது வாழ்வின் எழுச்சித் திட்ட இணைப்பாளர் ரகுநாதன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன்,சட்டத்தரணி ரெங்கன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி கரையோர இணைப்பாளர் ரட்ணகுமார், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், முன்னாள் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வாவியில் மிதந்தது ஆணின் சடலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்லடி பாலதுக்கு அருகிலுள்ள வாவியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - பிள்ளையாரடி நாகையா வீதியைச் சேர்ந்த எஸ்.மிவீந்திரன் என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப் பட்டுள்ளதாக உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது மகளின் சடங்கினை நிறைவேற்றிய நிலையில், பின்னர் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தினை தொடர்ந்து வீட்டை விட்டு வெளியேறியவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## 46 வர்த்தகர்களுக்கு அபராதம்

யாழ். மாவட்டத்திலுள்ள 46 வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களால் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 2 இலட்சத்து 8500 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் இணைப்பாளர் தனசேகரன் வசந்தசேகரம் தெரிவித்தனர்.

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் கடந்த ஆகஸ்ட் மாதம் யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, நிறை குறைந்த பாண் விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களின் விலையை காட்சிப்படுத்தாமை மற்றும் அதிக விலையில் பொருட்களை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களை செய்த 46 வர்த்தகர்கள் அடையாளம் காணப்பட்டனர். தொடர்ந்து, மேற்படி வர்த்தகர்களுக்கு எதிராக அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இதன் போது, மேற்படி வர்த்தகர்கள் அனைவரும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர்.

## பேருந்தை மறித்து உணவு கேட்கும் யானை



கதிர்காமம்-புத்தள பாதையில் பயணிக்கும் வாகனங்களின் சாரதிகளும் பயணிகளும் அப்பாதையில் குறுக்கிடுகின்ற யானைகளுக்கு தினமும் உணவுகொடுத்து பழக்கப்பட்டதால் தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட யானைகள் உணவை எதிர்பார்த்து அப்பாதையில் வந்து நிற்பது வழமையாகிவிட்டது. இவ்வாறு வாகனங்களில் வருவோர் உணவு கொடுக்காது சென்றால் யானைகள் அவ்வாகனங்களைத் தாக்கி சேதம் விளைவிக்கின்றன.இவ்வாறு சேதமாக்கப்பட்ட வாகனங்கள் இதுவரை 15 இற்கும் மேலுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இதுவிடயம் தொடர்பில் சிசிறகுமார என்ற வன இலாகா அதிகாரி குறிப்பிடுகையில் வாகன சாரதிகளிடம் யானைகளுக்கு உணவளிக்கும் செயலை செய்ய வேண்டாமென அறிவுறுத்திய போதிலும் அவர்கள் அதற்கு செவிசாய்ப்பதாக இல்லை எனத் தெரிவித்தார்.

## படம் பிடித்தவர் எச்சரிக்கப்பட்டார்

யாழ். போதனா வைத்திய சாலை வளாகத்தில் நின்றவர்களை கைத்தொலைபேசியில் படம் பிடித்த நபர், யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் செ.ஸ்ரீபவானந்தராஜாவால் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் தனது கைத்தொலைபேசியில் நோயாளர்களையும், நோயாளர்களைப் பார்வையிட வந்தவர்களையும் புகைப்படம் எடுத்துள்ளார்.

இதனை அவதானித்த வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மேற்படி நபரை பிடிக்க முற்பட்ட வேளை அந்நபர் தப்பித்து ஓடமுயன்றுள்ளார். ஓடிய நபரைப் பின்தொடர்ந்து சென்று மடக்கிப் பிடித்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அந்நபரை பிரதிப் பணிப்பாளரிடம அழைத்துச் சென்றனர். இதன் போது, மேற்படி நபர் தனது கைத்தொலைபேசியை தானாகவே உடைத்துள்ளார். மேற்படி நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பிரதிப்பணிப்பாளர், அவரை கடுமையாக எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளார்.

## புளியங்குளம் சமுர்த்தி வங்கிச் சங்கத்தில் திவிநெகும ஆறாம் கட்டம்

(வவுனியா)

திவிநெகும திட்டத்தின் ஆறாம் கட்ட பணிகள் நேற்று முன்தினம் வவுனியா வடக்கு புளியங்குளம் சமுர்த்தி வங்கிச் சங்கத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குக்கீழுள்ள மக்கள் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வ தற்கு இலகுவாக கடன்களை பெற்றுக்கொள்ளும் முகமாக புதிய கடன் வசதிகளுடன் இந்தத திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

வவுனியா சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் உதவி முகாமையாளர எஸ்.இலங்கேஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் புளியங்குளம் வங்கிச் சங்கத்துக்கு உட்பட 9 சமுர்த்தி உத்தியோகஸ்தர் பிரிவுகளில் வாழும் மக்களுக்கு கடன்கள் முதற் கட்டமாக வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் திவிநெகுமவின் வலயம் 6 இன் மேலதிக பணிப்பாளர் டி.குமாரசிறி, வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.


## நெடுந்தீவுக் கடற்பரப்பில் 9 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 9 இந்திய மீனவர்களை நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து காங்கேசன் துறை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்தனர்.

இராமநாதபுரம் பகுதியில் இருந்து இரண்டு படகுகளில் வந்த மேற்படி மீனவர்களின், ஒரு படகு கடலில் மூழ்கிய நிலையில், மற்றைய படகும், மீனவர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி மீனவர்களை கடற்படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாகவும், அவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் யாழ். கடற்றொழில் நீரியல் வளத் துறை திணைக்கள பிரதிப்பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்தார். (பா)



# க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான
# தமிழ் இலக்கணம் - புணரியல்

**1) ஆறு வகையான குற்றியலுகரமும் புணர்ச்சியில் கெடும்.**

| | | | |
|---|---|---|---|
| 1) நெடில்தொடர் | காசு + ஐ | → | காசை |
| 2) ஆய்தத்தொடர் | எ·கு + ஐ | → | எ·கை |
| 3) உயிர்த்தொடர் | விறகு + ஐ | → | விறகை |
| 4) வன்தொடர் | நாக்கு + ஐ | → | நாக்கை |
| 5) மென்றொடர் | பஞ்சு + ஐ | → | பஞ்சை |
| 6) இடைத்தொடர் | மார்பு + ஐ | → | மார்பை |

2) பழந்தமிழில் முற்றிலுகரமாகக் கருதப்பட்ட ஆனால் தற்காலத்தில் குற்றியலுகரமாக ஒலிக்கும் பின்வரும் சொற்களில் வரும் ஈற்றுகரம் கெடும்.

அ) அது, இது, எது

அது + ஐ → அதை
இது + ஐ → இதை
எது + ஐ → எதை

ஆ) கதவு, வளவு, கனவு ..........
கதவு + ஐ → கதவை
வளவு + ஐ → வளவை
கனவு + ஐ → கனவை

இ) இருமு, தும்மு, எண்ணு.....
இருமு + அல் → இருமல்
தும்மு + அல் → தும்மல்
எண்ணு + அல் → எண்ணல்

மேற்காட்டிய உதர்ரணங்கள் எல்லாம் அகப்புணர்ச்சிக்கு உரியமை. புறப்புணர்ச்சியில் தற்காலத் தமிழில் (உரைநடையில்) உயிர்முன் பெரும்பாலும் குற்றியலுகரம் கெடுவதில்லை. எனக்கு அவர் பணம் தந்தார். இவ்வாக்கியத்தை எனக்கவர் பணம் தந்தார் என நாம் எழுதுவதில்லை. அவருக்கு என்ன சொல்வது என்பது அவருக்கென்ன சொல்வது என எழுதப்படுவதில்லை.

எனினும் செய்யுள் இலக்கியத்தில் குற்றியலுகர ஈற்றுச்சொற்கள் புறப்புணர்ச்சியிலும் புணர்த்தியே எழுதப்படுகின்றன.

1) ஒன்றன் நிரண்டன் றுளதன் றிலதன்று
நன்றன்று தீதன்று

2) நமக்கென் னென்றிட் டுண்டிரும்
இவற்றைப் பின்வருமாறு பிரித்து எழுதலாம்.

1. ஒன்று அன்று இரண்டு அன்று உளது அன்று
இலது அன்று நன்று அன்று தீது அன்ற

2. நமக்கு என் என்று இட்டு உண்டு இரும்

பழந்தமிழ் இலக்கியங்களைப் படிக்கும்போது இத்தகைய குற்றியலுகரப் புணர்ச்சிகளை நிறையக் காணலாம்.

தற்காலத் தமிழில் குற்றியலுகரம் புணர்ந்த பல சொற்கள் வழக்கில் உள்ளன. அவற்றை நாம் பிரித்து எழுதுவதில்லை. பின்வரும் சில உதாரணங்கள்:

| | | | |
|---|---|---|---|
| அங்கங்கு | எங்கெங்கோ | வரவேற்பு | காசோலை |
| அடிக்கடி | நாடற்றோர் | கதவடைப்பு | எழுத்துலகம் |
| அடுக்கடுக்காக | வீடற்றோர் | அன்புள்ளம் | கூட்டாட்சி |
| என்றென்றும் | கூட்டரசாங்கம் | காற்றாடி | |

இவை ஒரு சொல்லாகவே பயன்படுவதால் இவற்றை அகப்புணர்ச்சியாகக் கொள்ளவேண்டும்.
மேலே தரப்பட்ட சொற்களைப் பிரித்துக் காட்டுக.

## உயிர் முன் மெய் புணர்தல்

உயிர்முன் மெய்புணர்தலை
(1) உயிர்முன் வல்லினம் புணர்தல்
(2) உயிர்முன் மெல்லின, இடையின மெய் புணர்தல் என இரண்டாக வகுத்து நோக்கலாம்.

## உயிர்முன் வல்லினம் புணர்தல்

குருவி கூடு கட்டியது - குருவிக்கூடு கீழே விழுந்தது.

ஆகிய வாக்கியங்களில் குருவி + கூடு என்னும் சொற்கள் இரு வேறு விதமாகப் புணர்ந்துள்ளமை பற்றி ஏற்கனவே பார்த்தோம். குருவி என்ற நிலைமொழி இறுதியில் இகர உயிர் உள்ளது. கூடு என்ற வருமொழி முதலில் க் மெய் உள்ளது. முதல் வாக்கியத்தில் அவை இயல்பாகப் புணர்ந்துள்ளன. இரண்டாவது வாக்கியத்தில் அவற்றுக்கிடையே வல்லினம் மிகுந்து விகாரப்பட்டுப் புணர்ந்துள்ளன.

'இயல்பாகப் புணரும்போது ஒரு பொருளும், வல்லினம் மிகுந்து விகாரப்பட்டுப் புணரும்போது வேறு ஒரு பொருளும் தருகின்றன. ஆகவே புணர்ச்சியில் எப்போது வல்லினம் மிகும், எப்போது மிகாது என்பதை அறிந்துகொள்வது அவசியமாகும்.

க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்கள் உயிர் ஈற்றுப் புணர்ச்சியில் மிகும் இடங்கள் கீழே விளக்கப்படுகின்றன. அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி இரண்டிலும் இவை மிகுகின்றன.

1. அ, இ, என ஆகிய சுட்டு, வினா எழுத்துக்களை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

அ + காலம் அக்காலம் அ +படம் இ + காலம் இக்காலம்
இ + படம் இப்படம் எ + காலம் எக்காலம் எ + படம் எப்படம்

2) அந்த, இந்த, எந்த ஆகிய சுட்டு வினாச் சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகும். உம் : அந்த + படம் அந்தப்படம்.

இந்த + புத்தகம் → இந்தப் புத்தகம்
எந்த + குழந்தை → எந்தக் குழந்தை

3) செய்ய என்னும் வாய்ப்பாட்டு அகர ஈற்று வினை எச்சத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

செய்ய + சொன்னான் → செய்யச் சொன்னான்
பேசு + பார்த்தேன் → பேசப்பார்த்தேன்
சொல்ல + தொடங்கினான் → சொல்லத் தொடங்கினான்

4) ஆகார ஈற்று எதிர்மறைப் பெயரெச்சத்தை அடுத்து வரும் வல்லினம் மிகும்.

தீரா + பசி → தீராப்பசி
ஆறா + துயரம் → ஆறாத்துயரம்
அடங்கா + பசி → அடங்காப்பசி
மாறா + காதல் → மாறாக்காதல்

5) இகர ஈற்று வினை எச்சத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

ஓடி + போனான் → ஓடிப்போனான்
ஆடி +திரிந்தான் → ஆடித்திரிந்தான்
கூட்டி + சென்றான் → கூட்டிச்சென்றான்
காட்டி + கொடுத்தான் → காட்டிக்கொடுத்தான்

6) அப்படி, இப்படி, எப்படி, இனி ஆகிய வினை அடைகளை அடுத்து வரும் வலினம் மிகும்.

அப்படி + சொன்னார் → அப்படிச் சொன்னார்
இப்படி + பார்த்தான் → இப்படிப்பார்த்தான்
எப்படி + கேட்டான் → எப்படிக்கேட்டான்
இனி + தூங்கலாம் → இனித்தூங்கலாம்

7) நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

தம்பிக் + கொடுத்தேன் → தம்பிக்குக்கொடுத்தேன்
எனக்கு + தந்தான் → எனக்குத்தந்தான்
அவருக்கு + சொன்னான் → அவருக்குச்சொன்னான்
பாம்புக்கு + பயந்தேன் → பாம்புக்குப்பயந்தேன்

8) வன்றொடர்க் குற்றியலுகரத்தை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

பாட்டு + பாடு → பாட்டுப்பாடு
பேச்சு + பேசு → பேச்சுப்பேசு
கருத்து + கூறினான் → கருத்துக்கூறினான்
நேற்று + பார்த்தேன் → நேற்றுப்பார்த்தேன்

நான்காம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொற்களும் வன்றொடர்க் குற்றியலுகர ஈறு பெற்றிருப்பதை நோக்குக.

9) இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற பெயர்ச்சொல்லை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

என்னை + பார்த்தான் → என்னைப்பார்த்தான்
நாளை + துரத்து → நாயைத்துரத்து
தலையை + துடைத்தேன் → தலையைத்துடைத்தேன்

10) வேற்றுமைத் தொகைச் சொற்களில் உயிரீற்றை அடுத்துவரும் வல்லினம் மிகும்.

யானை + பாகன் → யானைப்பாகன்
பட்டு + சேலை → பட்டுச்சேலை
கோழி + தீன் → கோழித்தீன்
குருவி + கூடு → குருவிக்கூடு
கிழக்கு + பல்கலைக்கழகம் → கிழக்குப்பல்கலைக்கழகம்

11) வினைத்தொகை தவிர்ந்த தொகைச் சொற்களில் பெரும்பாலும் வல்லினம் மிகும்.

| | | |
|---|---|---|
| அடிச்சொல் | அணுக்குண்டு | கலைக்கழகம் |
| தீப்பெட்டி | இராப்பகல் | கைக்குட்டை |
| நடுத்தெரு | உழவுத்தொழில் | வீட்டுத்தோட்டம் |
| பண்புத்தொகை | வெள்ளிப்பதக்கம் | புத்திக்கூர்மை |

12) அங்கு, இங்கு, எங்கு ஆகிய சொற்களை அடுத்துவரும் வல்லினம் மிகும் என பழைய இலக்கண நூல்கள் கூறும்.

அங்கு + சென்றேன் → அங்குசென்றேன்
இங்கு + சென்றேன் → இங்கு சென்றேன்
எங்கு + சென்றாய் → எங்குசென்றாய்

தற்காலத்து தமிழில் வல்லினம் மிகாமல் அங்கு சென்றேன். இங்கு சென்றேன், எங்கு சென்றாய் என எழுதுவதே பெருவழக்கு.

**உயிர் முன் மெல்லினம் / இடையினம் புணர்தல்**

1) அ, இ, எ ஆகிய சுட்டு வினா எழுத்துக்களின் முன்வரும் ஞ, ந, ம, வ ஆகிய மெல்லின எழுத்துக்கள் மிகும். யகரம் வந்தால் வகரம் மிகும்.

அ + ஞானம் → அஞ்ஞானம் ஆ + நூல் → அந்நூல்
அ + மனிதன் → அம்மனிதன் அ + வீடு → அவ்வீடு
அ + யானை → அவ்யானை


2) ஏனைய எல்லா இடங்களிலும் இயல்பாகப் புணரும்

இந்த + ஞாயிறு → இந்த ஞாயிறு
எந்த + நூல் → எந்தநூல்
அந்த + மனிதன் → அந்தமனிதன்
சொந்த + வீடு → சொந்தவீடு
பெரிய + யானை → பெரிய யானை !!

# English

**TEST 1**

**The following are some questions asked by an tourist about visition and the answers given by a tour guide. Match the questions with their corresponding answers and write the letter of the answer in the box given against each question.**



1) Are there many places to stay? ........................ F
2) Do many Chinese speak English? ......................
3) Are there many places to eat? ..........................
4) Is it easy to shop and where should I go? ..........
5) What are the good things to bring back? ...........
6) What are the interesting places I should not miss? ..............

**TEST 2**

**Read the following events in the ''Today's Events" column in a news paper. Then answer the questions given below.**

**TODAY'S EVENTS**

| | |
|---|---|
| 8.30 a.m | A photographic Exhibition "Wonders of Nature" organized by The Wild Life Society at the Art Gallery, Colombo -7 |
| 9.00 a.m | Opening of a new children's ward at General hospital Galle. Chief Guest Dr.Millton Frost |
| 10.00 a.m | Tamil Literacy Day at Town Hall Chilow. Guest speaker Prof. Arul Sivam. |
| 1.30 p.m | District Volly Ball meet at Suhada ground Badulla. |
| 2.00 p.m | Monthly meeting of the Sunshine Sports Club at Royal Beach Hotel, Bentota. |



a. Which event is at 2 p.m.? ....................................................................
b. Where is Suhada Ground ? .....................................................................
c. What is the name of the photographic exhibition? ..........................................
d. At what time will Dr.Milton Frost be at General Hospital, Galle? ..................
e. What is the event at Town Hall, Chilow? ..................................................

**TEST 3**

**Read the fllowing notice taken away frona news paper and answer the question given below.**

**FOODEX - 2012**
**Food trade Fair**
From 13 th - 16th July 2012, Tokyo, Japan
**The Export Promotion Board (EPB)**

is calling application from persons interested in promoting in the sale of the following items at the Foodex.

- Fruit and vegatable (Jams, chutneys, pickles and sauces)
- Tea (Green, herble, instant)
- Coconut product( Sweet, milk powder)
- Food items packed as gifts ( Gift packs)

Application should be made on the precribed form available at the Colombo office and the following provincial officers of the EPB.

- Central Province - First cross street, Kandy.
- North western Provonce - Hiriyaya Road, Kurunagala
- Southern Provonce - Devasiri Mawatha, Galle.

The completed application forms should be sent under reistered cover to reach

**The Derector,**
**Export Agricultural Division,**
**Sunmana Mawatta,**
**Colombo -2**

On or before 20th may 2012

**- CHAIRMAN**
**(EPB)**

1) What is the foodex 2012?
.......................................................................................
2) At how many offices can you get prescribed application forms?
.......................................................................................
3) What cocount products can be sold at the foodex 2012?
.......................................................................................
4) To whom should the application be sent?
.......................................................................................
5) What should go into gift packs?
.......................................................................................

**TEST 4**

**Read the following paragraph and answer the questions given below.**

Saman walks to school everyday. The walk from to school takes him only fifteen minutes. He usually walks to school with his friend Keerthi. Today Keerthi's uncle Nimal took both of them to school in his car.

a. How does Saman usually go to school? .............................................
b. How long does he take to go to school ? ...........................................
c. What is his friend's name ,? ...............................................................
d. How did Saman go to school today ? ...................................................
e. What is the name of uncle of Keerthi ? ...............................................

**TEST 5**

**Read the poem and answer the questions given below**

**Cage Bird and Sky Bird**

Cage Bird swung
From an apple tree
And his cage was of silver
And ivory
Nobody can be so happy, so happy,
sang the Cage Bird.

Sky Bird sang
From the a cloudless sky,
And his wings were wide
And bright his eyes
Nobody can be so glad as I;
Sang the sky Bird.

That wild song
To the garden fell
And the Cage Bird heard it,
in his silver cell.
Are you free then, are you truly free?
Cried the Cage Bird.


Sky Bird flew
In the trail of the Sun
And swiftly he soared,
Away from the gerden
Sadly sang the Cage Bird, when the day was done;
Sang the Cage Bird.

*Leslie Narris*

1) Why was the Cage Bird happy?
.......................................................................................
2) The Sky Bird's wings are wide, Why?
.......................................................................................
3) Find another word the poet uses for
(a) cage : ........................ (b) happy : ........................
4) How did the Cage Bird sing at the end of the day? why?
.......................................................................................
5) Write the line which means that the Sky Bird :
a) Sang a natural of uncontrolled song :
.......................................................................................
b) Rose up to the sky quickly :
.......................................................................................

**TEST 6**

**Raja and his brother visited the museum last week. The route they took is shown by the dotted line. Describe the route they took from the central bus stand to the museum. (Mention the palces they went to and passed on this way)**




.......................................................................................
.......................................................................................



நாடு முழுவதும் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட (சஹண அருண) நிவாரண கடன் வழங்கும் திட்டம் மருதங்கேணி மற்றும் பருத்தித்துறை சமுர்த்தி வங்கி கிளைகளிலும் நடைபெற்றது. இந் நிகழ்வுகளில் வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் கலந்துகொண்டு திட்டத்தை ஆரம்பித்து வைப்பதைக் காணலாம்.

# நிறைமதி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகமும் வடமாகாண கல்வித்திணைக்களமும் இணைந்து நடாத்தும் புரட்டாதித்திங்கள் நிறைமதி கலைவிழா நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலயகல்விப் பணிப்பாளர் எஸ்நந்தகுமார் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.இராசேந்திரன் பிரதமவிருந்தினராகவும், வடக்கு மாகாணக்கல்வி உதவிச் செயலாளர் திருமதி.சுகந்தி செபஸ்ரியன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வேப்ப மரத்திலிருந்து பால் வடியும் அதிசயம்



நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம முருகன் ஆலயத்திற்கு பின்புறமாகவுள்ள வேப்ப மரத்திலிருந்து பால் வடியும் அதியம் நிகழ்ந்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இவ் அதிசய நிகழ்வை அயலிலுள்ள மக்கள் நேரடியாக சென்று பார்வையிட்டு வருகின்றனர். (51,85)

# வவுனியா பொது வைத்தியசாலையில் விரைவில் இரத்த சுத்திகரிப்பு நிலையம்

## வடமாகாண சுகாதார அமைச்சர் தகவல்

(வவுனியா)

வவுனியா பொது வைத்திய சாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்புக்காக 6 இயந்திரங்களுடன் சிகிச்சை நிலையத்தை விரைவில் திறக்க தீர்மானித்துள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு அமைச்சின் வவுனியா உப அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையில் சிறுநீரக நோய் அதிகமாகவுள்ள இரண்டாவது மாவட்டமாக வவுனியா இனங்காணப்பட்டுள்ளது. இதனை அடுத்து, பெருமளவான நோயாளிகள் முல்லைத்தீவிலும் உள்ளனர்.

இவ்வாறான நிலையில், இதுவரை காலமும் சிறுநீரக நோய் தொடர்பான நோயாளிகள் இரத்தச் சுத்திகரிப்பு சிகிச்சைக்காக வெளிமாவட்டங்களுக்கு செல்லவேண்டியிருந்தது. இதனால் அவர்கள் பணப் பிரச்சினை, மொழிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டனர்.

வவுனியா பொது வைத்தியசாலையில் தற்போது நாம் சிறுநீரக நோயாளிகளுக்கு இரத்தச் சுத்திகரிப்புக்காக 6 இயந்திரங்களுடன் சிகிச்சை நிலையத்தை திறந்துவைக்கவுள்ளோம்.

இதற்கு மத்திய அரசும் வேறு நிறுவனங்களும் நிதியுதவி செய்துள்ளன. மேலும், மத்திய அரசு எமக்கு உதவி செய்வதாக தெரிவித்துள்ளமையால் முல்லைத்தீவிலும் இவ்வாறான சிகிச்சை நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளோம்.

சிறுநீரக நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பதற்காக வவுனியா மற்றும் முல்லைத்தீவில் சிகிச்சை நிலையங்களை ஆரம்பிக்கவுள்ளோம். இவை ஒவ்வொன்றும் 25 மில்லியன் ரூபாய் பெறுமதியில் வவுனியா, மாமடுவிலும் செட்டிகுளத்திலும் முல்லைத்தீவு மல்லாவியிலும் சம்பத்புரவிலும் நிறுவப்படவுள்ளன.

குறிப்பாக வடமாகாண சுகாதார, கல்வி மற்றும் விவசாய அமைச்சுக்கள் இணைந்து போசாக்கை மேம்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம் என்றார்.

# இலங்கை வங்கியினால் சித்திரப் போட்டி-2014

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி 75 ஆவது ஆண்டை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சித்திரப் போட்டி 2014 கல்வி அமைச்சின் அனுமதியுடன் நடாத்தவுள்ளது.

இப்போட்டி மூன்று பிரிவுகளாக நடாத்தப்படவுள்ளதுடன் தரம் 1-5 வரை ஆரம்பபிரிவாகவும் தரம் 6-9 வரை கனிஷ்ட பிரிவாகவும் தரம் 40-13 வரை சிரேஷ்ட பிரிவாகவும் போட்டி இடம்பெறவுள்ளன.

போட்டியாளர்கள் 18X14 அளவுடைய தாளில் ஒட்டாத வர்ணங்களை பயன்படுத்தி சித்திரம் வரையலாம் சித்திரங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பாட சாலை அதிபரின் உறுதிப்படுத் தலுடன் அருகில் உள்ள இலங்கை வங்கி கிளையில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (66

# நரியைப் பரியாக்கிய நல்லதோர் ஆவணி மூலநன்னாள் இன்று



தித்திக்கும் தீந்தமிழ்ப்பனுவலாகிய திருவாசகம் தந்த மாணிக்கவாசகருக்காக சிவபெருமான் நரிகளையெல்லாம் பரிகளாக்கிய நல்லதோர் ஆவணிமூல நன்னாள் இன்றாகும். பரங்கருணைத் தடங்கடலாகிய பரமசிவன், தமது பக்தரான திருவாதவூரடிகளின் சொன்ன சொல்லை அதாவது வாக்கைக் காப்பாற்றுவதற்காக நரிகளைப் பரிகளாக்கிய திருவிளையாடல் புரிந்தார்.

ஆவணி மூல நாளில் குதிரைகள் வந்து சேரும் என்று கூறி அரிமர்த்தன பாண்டியனுக்கு ஓலை அனுப்பியிருந்தார். மந்திரியாகிய திருவாதவூரடிகள் சிவபெருமான் செய்த திருவிளையாடல் என்ன தெரியுமா?

காட்டிலேயுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி நல்ல அங்க இலட்சணமுள்ள குதிரைகளாகத் தோற்றமளிக்கச் செய்துதானே குதிரைக்காரனாகவும் வந்தார் சிவபெருமான்.

பாண்டியனும் மிக்க மகிழ்ச்சியுடன் குதிரைகளைப் பெற்றுக்கொண்டு பரிசும் கொடுத்தனுப்பினான். சொன்ன சொல் தவறாமல் ஆவணி மூல நன்னாளில் குதிரைகள் வந்து சேர்ந்தமையால் பாண்டியன் உளம் மகிழ்ந்திருந்தான்.

சிவபெருமானின் திருவிளையாடல் பற்றிப்பாவம் அவன் அறிந்திருக்கவில்லை. அன்று நள்ளிரவில்தான் அந்த அதிசய அற்புதம் நிகழ்ந்தது. குதிரைகளாக மாறி வந்திருந்த நரிகளெல்லாம் மீண்டும் நரிகளாகின. ஏற்கனவே லயத்தில் நின்ற குதிரைகளையெல்லாம் கடித்துக்குதறின பெருத்தசத்தத்துடன் ஊளையிட்டுக் கொண்டு மதுரை மாநகரமெங்கும் ஓடித்திரிந்தன. மக்கள் அனைவரும் அஞ்சி நடுநடுங்கி அங்குமிங்கும் ஓடித்திரிந்து அல்லோல கல்லோலப்பட்டனர். இது பெரிய அவலமாகி மதுரை மாநகரமே களையிழந்து காணப்பட்டது. எங்கும் நரிகளின் அட்டகாசம்

இந்தச்செய்தி பாண்டிய மன்னனின் காதுகளுக்கு எட்டியது கடுஞ்சீற்றங்கொண்டு கொதித்தெழுந்தான். "எங்கே அந்தத்திருவாதவூரர்? இழுத்து வாருங்கள் அவரை. எங்களை ஏமாற்றி விட்டாரே" என்று சத்தமிட்டான்.

பிறகு நெற்றியிலே கல்லை வைத்து வெயிலிலே நிறுத்துமாறு கட்டளையிட்டான். தம்முடைய பக்தரைக் காப்பாற்றுவதற்காக எம்பெருமான் வைகையாற்றைப் பெருக்கெடுத்து ஓடச்செய்தார்.


இவ்வாறு நிகழ்ந்தமையால் பாண்டியன் அணைகட்டுமாறு பணித்ததும் செம்மனச் செல்விக்காக சிவபிரான் கூலியளாக வந்து பிரம்படிபட்டதும் திருவிளையாடல் புரிந்ததும் நாம் அறிந்ததே.

ஆதலில் இன்றைய ஆவணி மூல நன்னாளில் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி அவரை நினைந்து சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்போமாக.

*"நமச்சிவாய வாழ்க! நாதன் தான் வாழ்க!!"*

* * *

**தெய்வத் தமிழ்ச்சுடர்**
**இராசையா ஸ்ரீதரன்**



பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கான செயலாளர் நியமிக்கப்படாமையால் சபைச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. குறிப்பாக சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சந்தை கழிவுகள் உணவகங்களின் கழிவுகள் அகற்றப்படாமல் காணப்படுகிறது. (37)


# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள மாட்டேன்

## நவாஸ் ஷெரீப் திட்டவட்டம்



நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தைக் கலைக்க எவரையும் அனுமதிக்க மாட்டேன் என்றும் தமது பதவியிலிருந்து விலகவும் முடியாது என்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமர் நவாஸ் ஷெரீபும் இராணுவ தலைமைத் தளபதி ரஹீல் உடனான சந்திப்பின்போது, எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று நவாஸை பதவி விலகுமாறு ரஹீல் அறிவுறுத்தியதாக பாகிஸ்தானைச் சேர்ந்த துனியா தொலைக்காட்சி செய்தி வெளியிட்டது.

அதில், தற்காலிகமாக 3 மாத காலம் பதவியில் இருந்து விலகி இருக்கும்படியும், இந்த காலகட்டத்தில் தேர்தல் முறைகேடு புகார் குறித்து விசாரணை மேற்கொள்ளலாம் என்றும் இராணுவத் தளபதி ஆலோசனை வழங்கியதாக செய்திகள் வெளியாகின. ஆனால் இந்த செய்தியை பாகிஸ்தான் அரசும் அநநாட்டு இராணுவமும் மறுத்தன.

இந்த நிலையில் இதற்கு பதில் தரும் விதமாக அரசியல் கட்சிகள் சிலவற்றின தலைவர்கள் உடனான சந்திப்பின் போது அந்நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரீப், "நமது அரசியலமைப்பு சட்டத்தை எவரும் சிதைக்க அனுமதிக்க மாட்டேன்" என்று தெரிவித்ததாக 'தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், பிரதமர் பதவியை ராஜினாமா செய்யவோ அல்லது தற்காலிகமாக விடுப்பு எடுத்துக் கொள்ளவோ முடியாது என்று ஷெரீப் குறிப்பிட்டதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் முறைகேடுகளில் ஈடுபட்டு வெற்றி பெற்றதாகவும், அதனால் அவரது வெற்றி செல்லாது என்று பிரதமர் பதவியிலிருந்து நவாஸ் ஷெரீப் விலக வேண்டும் என்று கூறி கடந்த 20 நாட்களாக போராட்டம் நடந்து வருகிறது. இதனால் பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.



பிரிட்டனில் இருந்து பிரிந்து சென்ற ஸ்கொட்லாந்து தனி நாடு தொடர்பாக பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. ஸ்கொட்லாந்தின் கட்சி தலைவர் ஆலிஸ்டர் டெர்லிங் பிரசாரத்தை தொடக்கி வைத்தார்.

# தாயைத் தத்தெடுப்பதற்கு ஒரு கோடி கொடுக்கும் வாலிபர்




ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசு இருந்தால் வாங்கலாம் அம்மாவையும் வாங்கமுடியும் என்பதை நீருபிக்கும் வகையில் சீனாவைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் தாயை விலை கொடுத்து தத்தெடுக்க முடிவு செய்துள்ளார்.

அதாவது குயாங்கானை சேர்ந்த 30 வயது நபர் ஒருவர் இணையதளத்தில் ஒரு விளம்பரம் கொடுத்துள்ளார். அதில் தான் ஒரு பெண்ணைத் தாயாக தத்தெடுக்க விரும்புவதாக கூறியுள்ளார்.

அந்த பெண் 57 வயது இருக்க வேண்டும். அவருக்கு நல்ல கல்வி அறிவு இருக்க வேண்டும். போதை பொருள் பயன்படுத்துபவராக இருக்கக்கூடாது.

அவருக்கு வெளிநாடுகளில் பயணம் செய்த அனுபவம் இருக்க வேண்டும். தனக்கு தாயாக இருக்க அவருக்கு ரூ. 1 கோடி பணம் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

விளம்பரத்தின் அருகே பெரிய சிவப்பு விளக்கை பிடித்தபடி அவர் நிற்கும் புகைப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அவரது கையெழுத்து, தொலைபேசி நம்பர் உள்ளிட்ட விவ ரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த விளம்பரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஏவுகணை சோதனையில் வடகொரியா

பிராந்திய நாடுகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வட கொரியா மற்றுமொரு ஏவுகணையை பரிசோதித்துள்ளது.

குறுந்தூர ஏவுகணை ஒன்றே இவ்வாறு பரிசோதிக்கப்பட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது. வடகொரியாவின் 'கிழக்கு கடற் பகுதியில் குறித்த குறுந்தூர ஏவுகணை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

60 கிலோ மீற்றர் தூரத்துக்கு சென்று தாக்கக்கூடிய வகையில் குறித்த ஏவுகணை தயாரிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனைக்கு தென்கொரியா கடும் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளது. மேலும் வடகொரியாவின் ஏவுகணை பரிசோதனையை நிறுத்தவேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இடைத்தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கவேண்டும்

இந்தியாவில் உள்ளாட்சி இடைத்தேர்தலில், இளைஞர் காங்கிரஸார் போட்டியிட, வாய்ப்பு வழங்க வேண்டும் என, காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல், மேலிட பொறுப்பாளர் முகுல் வாஸ்னிக் ஆகியோரிடம், தமிழக இளைஞர் காங்கிரஸ் சார்பில் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய, 3 மாநகராட்சிகளின் மேயர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில், இடைத்தேர் தலைப் புறக்கணிப்பதாக, தி.மு.க., பா.ம.க., ஆகிய கட்சிகள் அறிவித்துள்ளன. ஆனால், மார்க்., கட்சி போட்டியிடப் போவதாக அறிவித்திருக்கிறது. பா.ஜ., தரப்பினரும் தே.மு.தி.க., ஆதரவுடன் தேர்தலில் போட்டியிட தயாராகி வருகின்றனர்.

போட்டியிட வாய்ப்பு வழங்கினால், சில இடங்களில் வெற்றியும் பெறலாம். மேயர் தேர்தலில் போட்டியிடவும், இளைஞர் காங்கிரசை சேர்ந்த பெண்கள் தயாராக உள்ளனர்.

தேர்தலுக்கு முன் தி.மு.க., தலைவர் கருணாநிதியை, இளைஞர் காங். நிர்வாகிகள் சந்தித்து ஆதரவு கேட்கவும் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

# இந்தியாவின் பெருமைகளை சிறுவயதிலே தெரிந்து கொண்டேன்

## ஜப்பான் பிரதமர் தெரிவிப்பு



எனது தாத்தாவின் மடியில் உட்கார்ந்து சிறுவயதிலேயே இந்தியாவின் பெருமைகளை தெரிந்து கொண்டேன் என்று ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி தற்போது ஜப்பானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவருக்கு அளிக்கப் படும் மரியாதையை பார்த்து, வியந்து போய் ட்விட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜப்பான், இந்தியா இடையேயான உறவு இன்று நேற்று அலல கடந்த 1957ஆம் ஆண்டில் இருந்தே பலமாக உள்ளது.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேயின் விருந்தோம்பலை விவரிக்க வார்த்தைகளே இல்லை என மோடி தெரிவித்துள்ளார்.

இந்த ஷின்சோ அபேயின் தாத்தா நொபுசுகே கிஷியும் ஒரு காலத்தில் ஜப்பான் பிரதமராக இருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. முன்னதாக அவரது தாத்தா 1957 ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா வந்தபோது அப்போதைய பிரதமர் ஜவஹர் லால் நேரு கிஷிக்கு ராஜ மரியாதை அளித்து கவனித்தார்.

அபே சிறு குழந்தையாக இருக்கையில் அவரது தாத்தா கிஷி அவரை தூக்கி தனது மடியில் வைத்து, தான் இந்தியா சென்றபோது ஜவஹர்லால் நேரு தன்னை 1 இலட்சம் பேர் முன்னிலையில் பெருமையாக அறிமுகப்படுத்தியதாக கூறி நெகிழ்ந்துள்ளார்.

உலகச் செய்திகள்

# "மங்கள்யான்" விண்கலம் விரைவில் செவ்வாயை அடையும்

செவ்வாய் கிரகத்தை ஆராய அனுப்பப்பட்ட "மங்கள்யான்" விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் 300ஆவது நாள் பயணத்தை நிறைவு செய்ததாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. இந்தத் தகவல் இஸ்ரோவின் சமூக வலைதளத்தில் வெளியிட்டப்பட்டுள்ளது. இன்னும் 23 நாட்களில் மங்கள்யான் விண்கலம் செவ்வாய் சுற்றுவட்டப் பாதையை அடையும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய மக்களின் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் செவ்வாய் கிரகத்தை ஆராய்வதற்கான "மங்கள்யான்" விண்கலம் ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் இருந்து பி.எஸ்.எல்.வி.-சி-25 ரொக்கெட் மூலம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் விண்ணில் ஏவப்பட்டது.

செப்ரெம்பர் 24 ஆம் திகதி செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதைக்குள் மங்கள்யான் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் "மங்கள்யான்" விண்கலம் செவ்வாய் சுற்றுவட்டப்பாதைக்குள் செல்ல 23 நாட்கள் ஆகும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

# அவுஸ்ரேலியாவில் சிவனுக்கான முதல் குகைக்கோவில் திறப்பு

அவுஸ்ரேலிய தலைநகர் சிட்னியின் புறநகர் பகுதியான மிண்ட்டோவில் உலகிலேயே முதன்முதலாக மனிதர்களால் உருவாக்கப்பட்ட குகைக் கோயிலினுள் 4.5 மீற்றர் உயரமுள்ள பளிங்குக்கல்லினால் ஆன சிவபெருமானின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

முக்தி குப்தேஸ்வரர் கோயில் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கோயிலில் பிரதிஷ்டை செய்யப் பட்ட சிவபெருமானின் சிலை உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள வாரனாசியில் இருந்து வரவழைக்கப்பட்டுள்ளது.

ஒற்றை பளிங்குக்கல்லில் வடிக்கப்பட்ட இந்த அழகிய சிலை, சிவபெருமான் நான்கு கரங்களுடன் அமர்ந்திருப்பது போல் செதுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலையின் பின்புறத்தில் நிமிடத்திற்கு ஒரு நிறம் என்ற வகையில் மிளிரும் கண்ணைக் கவரும் வண்ண விளக்குகள் காண்போரை பக்தி பரவசத்துக்குள்ளாக்குவதாக அவுஸ்ரேலியாவில் வசிக்கும் பக்தர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தக் குகைக் கோயிலினுள் 1,128 சிற்றாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. குகையினுள் 10 அடி ஆழத்தில் பாதுகாக்கப்பட்டுவரும் ஒரு பெட்டகத்தில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த சுமார் 20 இலட்சம் பக்தர்கள் ஓம் நமசிவாய என்று தங்கள் கைப்பட எழுதிய பிரதியையும் வைத்துள்ளனர்.

# மகிந்த சிந்தனை திட்டத்தின் நன்மைகளை வடக்கிற்கு பெற்றுக்கொடுத்தவர் அமைச்சர் டக்ளஸ்



மகிந்த சிந்தனை என்பது ஒரு மிகப்பெரும் அபிவிருத்தித் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலம் கொண்டுவரும் அனைத்து அபிவிருத்தித்திட்டங்களையும் வட பகுதி மக்களுக்கு பெற்றுத்தரும் பொறுப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தான் மேற்கொண்டு வருகின்றார் என ஈ.பி.டி.பியின் சர்வதேச பிராந்தியத்தின் முக்கி பஸ்தர் விந்தன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளை பிரதேசத்துக் குட்பட்ட வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான கடனுதவித் திட்டத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் மக்கள் பெற்றுக் கொள்ளும் ஒவ்வொரு சலுகைகளும் எவ்வாறு கிடைக்கின்றது என்பதை புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு தமது அடுத்தகட்ட செயற்பாடுகளை நகர்த்திக் கொள்ள வேண்டும். இன்று வழங்கப்படும் இந்த திட்டமானது மகிந்த சிந்தனையின் கீழ் "உதவும் கரங்கள்" என்ற பெயரில் உருவாக்கப்பட்டு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு திட்டமாகும். இந்தக் கடன் உதவியானது வயது வரையறையற்றதும் பிணையாளிகள் தயவின்றியும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விசேட திட்டமாகும். இது மகிந்த சிந்தனையின் மூலம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் உதவித்திட்டத்தின் மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வட பகுதி மக்களுக்கு பெற்றுத்தரப்பட்ட ஒரு திட்டமாகும். இதில் நுகர்வுக்கடன், வாழ்வாதாரக் கடன் உதவியாகவும் ரூபா 5,000 இருந்து 50,000 ரூபா வரை வழங்கப்படவுள்ளது. இது ஏனைய வங்கிகளில் இருந்து பெறும் கடனைவிட முற்றிலும் மாறுபட்டதாக காணப்படுகிறது. ஒரே நாளில் எந்தவொரு நிபந்தனையும் அற்ற வகையில் மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் ஒரு கடனுதவித்திட்டமாகும்.

வடபகுதியில் ஏறத்தாழ 143000 குடும்பங்களைச் சேர்ந்த 6 இலட்சம் சமுர்த்திப்பயனாளிகள் உதவி பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் மூலம் உள்வாங்கப்பட்டு "உதவும் கரங்கள்" திட்டத்தின் மூலம் வாழ்வின் எழுச்சிப்பயனாளிகளாக உள்வாங்கப்பட்டுள்ளனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்படுத்திய இணக்க அரசியலின் வலிமை மூலம் பெறப்பட்ட பயன்கள் தான் தற்போது குடாநாட்டு மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் அபிவிருத்திகளும் உதவிகளுமாகும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெல்லிப்பளை பிரதேச செயலர், ஈ.பி.டி.பி.யின் வலி. வடக்கு இணைப்பாளர் அன்பு, சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி உத்தி யோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மீண்டும் புதுப்பொலிவுடன் காரை.சிவஞானோதையா பாடசாலை

(காரைநகர்)

நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருந்த காரைநகர் ஆயிலி சிவஞானோதையா வித்தியாலயம் புனரமைக்கப்பட்டு இப்போது புதுப்பொலிவுடன் திகழ்கிறது. 25 வருடங்களின் பின்னர் மீண்டும் புனரமைக்கப்பட்டு அதிபர் இ.வசீகரன் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேச இணைப்பாளருமான வீ.கண்ணன் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரை மீள நான்கு பாடசாலைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைவாக திறந்து வைக்கப்பட்டுள்ளது, இன்றைய தினம் ஆரம்பிக்கப்படும் பாடசாலையும் அவரின் பணிப்புரையின் பிரகாரம் திறக்கப்படுவதை எண்ணி தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், இநதப்பாடசாலை திறப்பதற்கு அனுமதி கிடைத்திருந்தும் சிலமறைமுகமான அரசியல் வாதிகளால் தாமதமானதை இட்டு மனம் வருந்துவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தீவக வலய்க் கல்விப் பணிப்பாளர் திரு.யோன் குயின்ரன்ஸ், ஓய்வுபெற்ற முன்னாள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணன் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள் மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## மோட்டார் சைக்கிள் திருட்டு இருவாரத்தில் பிடிபட்டது

கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்து, இரண்டு வாரங்களுக்கு முன்னர் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய்ப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,

கல்வியங்காட்டுச் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பூட்டு உடைக்கப்பட்டு திருட்டுப் போயிருந்தது.

இது தொடர்பில் உரிமையாளர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார்.

இந்நிலையில், கோப்பாய்ப் போக்குவரத்துப் பொலிஸார் கோப்பாய்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 பேருடன் வந்த மோட்டார் சைக்கிளொன்றை மறிக்க முற்பட்டுள்ளனர்.

இதன்போது, மேற்படி மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தப்பித்து ஓடியுள்ளனர். அவர்களைப் பொலிஸார் துரத்திச் சென்ற வேளையில், மேற்படி நான்கு நபர்களும் மோட்டார் சைக்கிளைக் கைவிட்டு தப்பித்துச் சென்றனர்,

தொடர்ந்து, மேற்படி மோட்டார் சைக்கிளை மீட்டு, விசாரணைகளை முன்னெடுத்த வேளை மேற்படி மோட்டார் சைக்கிள் கல்வியங்காட்டுப் பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் என்பது தெரியவந்தது.

இந்நிலையில், தப்பியோடிய நால்வர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் மேலும் கூறினர்.

## போக்குவரத்து ஒழுங்கை மீறும் பேருந்துகள் நீதிமன்றங்களில்

(கொழும்பு)

நாடெங்கிலும் பெருந்தெருக்களில் வீதி ஒழுங்கினைக் கருத்திற் கொள்ளாத மக்கள் போக்குவரத்து பஸ் வண்டிகளுக்காக எதிர்வரும் காலங்களில் தண்டப்பத்திரம் வழங்கப்படக்கூடாது எனவும், நீதிமன்றின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பொலிஸ் நிலையங்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

பஸ் வண்டிகளால் ஏற்படும் விபத்துக்களின் தொகையில் அதிகரிப்பைக் கருத்திற்கொண்டே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், பஸ் வண்டிகள் தொடர்பில் சட்ட திட்டங்களை மீறும் வழக்குகளைப் பெற்றுக் கொள்ளும்போது, பொலிஸார் கவனத்திற் கொள்ள வேண்டிய 14 விடயங்கள் பற்றியும் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

நுழைவிடங்களில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், முன் பக்கமாக நடத்துநர் ஏறிக் கொண்டு பயணம் செய்கின்ற ஏனைய வாகனங்களிலிருந்து இடம் கேட்டல், ஒரு கையால் சுக்கானை இயக்கிக் கொண்டு செல்லுதல் முதலிய விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## கடத்தப்பட்டார் முன்னேஸ்வரம் பூசகர்

நீர்கொழும்பு, ஆண்டி அம்பலம பிரதேசத்தில் அமைந்துள்ள சிறிய முன்னேஸ்வரம் கோயிலின் பிரதான பூசகர் (கப்பு மாத்தயா) மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களால் நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணியளவில் கடத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்டி அம்பலமவில் அமைநதுள்ள புஞ்சி முன்னேஸ்வரம் கோயிலின் பிரதான பூசாரியான வர்ணகுலசூரிய கம்கானாம்லாகே ம்னோஜ் துலாஞசன் என்பவரே கடத்தப்பட்டவராவார்.

இது தொடர்பாக பூசாரியின் மனைவியான மல்காந்தி என்பவர் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டில் மேலும் தெரிய வருவதாவது,

ஆலய வேலைகள் முடிவடைநததும் எங்களது இரண்டு குழந்தைகளுடன் நானும் கணவரும் எங்கள் வாகனத்தில் நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு சென்று கொண்டிருந்தோம்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்திருந்த நபர்கள் வாகனத்தை இடைநடுவில் வைத்து மறித்தனர், அதன்போது எனது கணவர் (பூசகர்) வாகனத்தின் கதவை திறந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் கறுப்பு நிற உடை அணிந்திருந்தனர்.

அவ்விருவரும் எனது கணவனை பிடித்து வாகனத்திற்கு வெளியே இழுத்தனர். நாங்கள் கூச்சலிட்டோம். எங்களையும் அச்சுறுத்திவிட்டு தாம் வந்த மோட்டார் சைக்கிளிலேயே அவரகள் கணவனை கடத்திச் சென்றுவிட்டனர் என்று தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட நபருக்கு, காணி மற்றும் பணம் தொடர்பான பிரச்சினைகள் இருப்பதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்று தெரிவித்த நீர்கொழும்பு பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

### மனித உரிமை...

நிலைப்பாடு என்றார்.

ஐ.நா.வின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை குறித்து இலங்கை அரசாங்கம் வெளியிட்ட கரிசனைகளை புதிய ஆணையாளர் சையத் அல் ஹுசைன் கருத்திலெடுத்து பக்கச்சார்பற்ற விதத்தில் செயற்படுவார் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் நம்பிக்கை வெளியிட்டிருந்த நிலையிலேயே ஐ.தே.க. நேற்று இவ்வாறு தெரிவித்துள்ளது.

### காணாமற்...

களை பதிவுசெய்யும் ஆணைக குழுவின் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பகுதியில் இதன் அமர்வுகள் இடம்பெற உள்ளன. கிளிநொச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதால் அந்தப் பகுதிகளில் இரண்டாவது தடவையும் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### வர்ணப்...

தொடர்பும் இல்லை எனவும் முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக கொடிகாமப் பொலிஸார் தெரிவித்தனர். (18)

### ஐ.நா. விசாரணை...

றும் தலவத்து கொடையைச்சேர்ந்தவர் என்றும், ஐக்கிய நாடுகள் சபையில், அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகளுக்கு தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கிலேயே தீக்குளித்ததாக பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

22 வருடங்கள் இராணுவ சேவையிலிருந்த அவர், தனக்கு தானே தீ மூட்டிக்கொள்வதற்கு முன்னர், மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்ணான்டோ மற்றும் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்னவுக்கு எதிராகவும் கோஷம் எழுப்பியுள்ளார்.

### தமிழ்த்தேசிய....

அதிகாரமும் அளிக்கப்படவில்லை என்று அவர்கள் தான் சொல்கின்றனர்.

இப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகக் கூறுகின்றனர். இந்தியாவின் நிலைப்பாடே இரட்டை வேடமாக உள்ளது.

எனவே ஈழத் தமிழ் மக்களின் கருத்தைக் கேட்டு முடிவு செய்வது தான் சரியாக இருக்கும் என பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

### அரச...

ளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஊழியர்களை இணைக்கும் விடயத்தை மேன்பவர் என்ற நிறுவனமே செய்கிறது. குறிப்பாக இலங்கை மின்சார சபையில் இதனை அதிகளவில் காண முடிகின்றது. அரசாங்கத்தின் பங்காளிகள் என்பதனர் லேயே நாம் இதனைக் கூறுகின்றோம் எனத் தொவித்தார்.

### பாடசாலை...

ருந்தனர். இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட வடமாகாண கல்வித் திணைக்களம், குறித்த பாடசாலை அதிபரை நேற்று முன்தினம் முதல் வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்துக்கு இணைததுள்ளதுடன் உப அதிபரை வேறு பாடசாலைக்கு இடமாற்றமும் செய்துள்ளதாக தெரிய வருகிறது.

# பொறுப்பற்ற கருத்துக்களை தெரிவிக்க கூடாது பான் கீ மூன்

## அத்தே ஞானசார தேரர் கொதிப்பு




இலங்கையில் பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் எதிராகத் தலைதூக்கியுள்ள முஸ்லிம் பயங்கரவாதம் தொடர்பில் கண்களை மூடிக்கொண்டு உலகில் பௌத்த பயங்கரவாதம் தலைதூக்கி வருவதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன்தெரிவித்த கருத்தானது கவலைக்குரியதாகும் எனத் தெரிவித்த பௌத்த கடும்போக்கு அமைப்பான பொது பலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசாரதேரர் இலங்கையில் பௌத்தர்களின் பயங்கரவாதம் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் பொறுப்பான பதவி வகிப்பவர். அவ்வாறானவர் பொறுப்பற்ற ரீதியில் கருத்துக்களை வெளியிடக் கூடாது. எதையாவது கூற வேண்டுமானால் சிந்தித்து புத்திக் கூர்மையுடன் தெரிவிக்க வேண்டும்.

உலகில் பௌத்த பயங்கரவாதம் தலைதூக்கி வருவதாகவும் இலங்கையில் இவ்வாறான பௌத்த பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதோடு சிறுபான்மை இன மதங்கள் ஒடுக்கப்படுவதாகவும் ஐ.நா. செயலாளர் நாயகம் தெரிவித்த கருத்து கவலைக்குரியதாகும்.

இலங்கையில் பௌத்த பயங்கரவாதம் கிடையாது மாறாக முஸ்லிம் அடிப்படை வாதமும் பயங்கரவாதமும் சேர்ந்து பௌத்த இந்த மதங்களை ஒழிப்பதற்கான சதித்திட்டங்களை முன்னெடுக்கின்றது. ஆனால் நாம் இந்துக்களையும் இணைத்துக்கொண்டு அம்மதத்தை பாதுகாக்கும் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

உலகமே இன்று முஸ்லிம் பயங்கரவாதத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. எங்கும் பௌத்த பயங்கரவாதம் இல்லை. பௌத்தர்கள் அகிம்சையை கடைப்பிடிப்பவர்கள். பயங்கரவாதிகள் அல்ல என்பதை ஐ.நா. செயலாளர் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சர் மேர்வினின் உரையை தடுத்து நிறுத்திய ஜனாதிபதி

(கொழும்பு)

பொது மக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தாக்குதல் உரையை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இடையில் தடுத்து அவருக்கு அறிவுரை வழங்கிய சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

ஊவா மாகாண சபைத்தேர்தலுக்காக மொனராகலையில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், அமைச்சர் மேர்வின் சில்வாவும் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அமைச்சர் தமது உரையில், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.வி) தலைவர் அனுர குமார திஸாநாயக்க தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்து அவரை தனிப்பட்ட ரீதியில் தாக்கிப் பேசினார்.

இதனை அவதானித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அமைச்சரின் பேச்சை இடைநிறுத்தியதுடன் எவரையும் தனிப்பட்ட ரீதியில் தாக்கிப்பேசக்கூடாது என்று பணித்தார். ஜனாதிபதியின் அறிவுரையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மேர்வின் தனது உரையை தொடர்ந்தார்.

# இலங்கையர் வெளியேற மலேஷியா காலக்கெடு

சட்ட விரோதமாக மலேஷியாவில் தங்கியிருக்கும் இலங்கையர்களை அங்கிருந்து வெளியேறுமாறு மலேஷிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

சுற்றுலா விசாவில் மலேஷியாவுக்கு சென்று அங்கு தொழிலில் ஈடுபடுகின்ற இலங்கையர்கள் தொடர்பான தகவல்களை அந்த நாட்டு அரசாங்கம் திரட்டியுள்ளது.

இதற்கமைய மலேஷியாவில் சட்ட விரோதமாகத் தங்கியுள்ள இலங்கையர்கள் அங்கிருந்து வெளியேறுவதற்காக எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் வெளியேறத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மலேஷிய அரசாங்கம் எச்சரித்துள்ளது.

# மூன்றாவது போட்டியை வென்று தொடரைக் கைப்பற்றியது இந்தியா

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றிக் கொண்டது. நேற்றைய தினம் எட்ஜ்பாஸ்ரன் மைதானத்தில் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தது இந்திய அணி. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 49.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்தாடிய 'இந்திய அணி 30.3 ஓவரில் 212 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அவ்வணி சார்பில் ரகானே 106, தவான் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆட்ட நாயகனாக ரகானே தெரிவானார். 5 ஆவதும், இறுதியுமான போட்டி எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# குறைந்த கட்டணத்தில் சுற்றுலா; முதியோர்களுக்கு வாய்ப்பு

இலங்கையிலுள்ள முதியோர்களுக்கு குறைந்த கட்டணத்தில் வெளிநாட்டு சுற்றுலா ஒழுங்குகளை மேற்கொள்ள உள்ளதாக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் சுவிந்த எஸ்.சிங்கப்புலி தெரிவித்தார்.

முதியோர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உலகின் மிக முக்கியமான சமய வழிபாட்டு தலங்கள் வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை வழமையான சுற்றுலா கட்டண ஒழுங்கை விட குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய இவ் வருடம் ஒக்ரோபர் மாதத்திலிருந்து இந்தியாவிற்கான சுற்றுலா ஒழுங்கு ஆரம்பிக்கப்பட உள்ளது.

அடுத்த வருடம் முதல் ஜெருசலேம், ரோம், தாய்லாந்து, வியட்நாம், திபெத், ஜப்பான், பூட்டான், இந்தோனேசியா, கொரியா, சிங்கப்பூர், மலேசியா, எகிப்து, கம்போடியா, ஆகிய நாடுகளுக்கும் விஸ்தரிக்க திட்டமிட்டதாகவும் தெரிவித்தார்.

இவ் வேலைத்திட்டம் தொடர்பில் அக்கறையுடனும் பொறுப்புடனும் செயற்படும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு இலவசமாக போக்குவரத்து ஒழுங்கு செய்யப்படுமெனவும் மேலும் தெரிவித்தார்.

இலங்கை முதியோரை சர்வதேச தரத்திற்கு வளர்க்க உதவும் இத்தகைய திட்டங்களை இலங்கையிலுள்ள முதியோர் சங்கங்கள் வரவேற்றுள்ளன.

(90)

# சுப்பிரமணிய சுவாமியைக் கைது செய்யக்கோரிக்கை

## கொடும்பாவியும் எரிப்பு

ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமியை உடன் கைது செய்யுமாறு மீனவ பிரதிநிதிகள் வலியுறுத்தல் விடுத்துள்ளதாக இந்து த ஹிந்து பத்திரிகை இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கைது செய்யப்படும் மீனவர்களின் படகுகளைத் தடுத்து வைக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு தாமே ஆலோசனை கூறியதாக சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்திருந்தார்.

சுப்பிரமணியம் சுவாமியின் இந்தக் கருத்திற்கு தமிழகத்தில் கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே, தமிழக முதல்வரின் நடவடிக்கைக்கு எதிராகவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை முடக்கிய குற்றத்துக்காகவும் சுப்பிரமணியம் சுவாமியை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று தமிழக மீனவ பிரநிதிகள் வலியுறுத்தல் விடுத்துள்ளனர்.

இதனிடையே தமிழகத்தில் நேற்றைய தினம் சுப்பிரமணியம் சுவாமியின் கொடும்பாவியும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியினரால் எரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுப்ரமணியம் சுவாமிக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், இசட் தர உயர் பாதுகாப்பு வழங்கப்படுபவர்கள் பட்டியலில் அவரது பெயரும் சேர்கப்பட்டுள்ளது.

முன்னர், சுப்ரமணியம் சுவாமிக்கு தமிழக மாநிலத்தில் மட்டுமே இந்த தரத்திலான பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

தற்போது, அவரின் வேண்டுகோளுக்கு அமைய இந்தப் பாதுகாப்பு இந்தியா முழுவதுக்கும் அவருக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலை வாய்ப்புக்கேற்ப கற்கை நெறிகளை வழங்கும் MCS**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின்பின் பல்கலைக்கழகம் செல்லும் வரையான சுமார் ஒன்றரை வருடகாலப்பகுதியில் மாணவர்கள் சிறந்த தொழில் தகைமையுடைய கற்கைநெறிகளை பயில்வது அவசியமாகின்றது.

உங்களிற்காக நாங்கள் வழங்கும் கற்கைநெறிகள்

1. **CIMA UK** - Certificate in Business Accounting (3 Mths)**(50000 Rs.Schol)**

• மிகச் சிறந்த பெறுபேறு. • மிகச் சிறந்த விரிவுரையாளர் அணி.

• அனைத்துப்பரீட்சைளையும் எமது நிறுவனத்தில் தோற்ற முடியும்

2. **MCSE** USA Network/ Web/ Software Engineering (6 Months)

இம்மாணவர்களிற்கு இலங்கை அரசு ICTA ஊடாக புலமைப்பரிசில்களை வழங்கி வருகின்றது. வேளிநாடுகளிற்கு Workpermit மூலம் செல்லவோ/ வெளிநாட்டு வேலைகளை Outsourcing மூலம் இங்கிருந்தவாறே மேற்கொள்ளவோ முடியும்.

**இலவச கணினிப்பயிற்சி** (web design, multimedia, Network)


ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 15வருடங்களைப் பூர்த்தி செய்த எமது நிறுவனம் பாடசாலைக்கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களிற்கு பயிற்சிநெறியினை கற்கைநெறிக்கட்டணமின்றி வழங்கவுள்ளோம். விண்ணப்பிக்க விரும்புவோர். தமது Free <Name><Date.of.birth> என்பற்றை 772395895 என்ற இலக்கத்திற்கு sms செய்யவும்.

3. **DIITEC** Diploma in Information Technology (6 Months)

- Srilanka Vocational Training Authority
- University of Cambridge
- International Computer Driving Licenses
- University of Colombo,
- Microsoft Technology Associate

மேற்குறிப்பிட்டவற்றின் அங்கீகாரமுள்ள கணினி(MS office, web design, Hardware,) ஆங்கில. சிங்கள மொழி தகைமைகள் 7வரை உங்களிற்கு வழங்கும் கற்கைநெறி. இக்கற்கைநெறியைதொடர்ந்து 2வருடங்களில் **கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப டிகிறி** தகைமையும் பெற்றுக் கொள்ளமுடியம்.

**உருவில் காணப்படும் முக்கோணிகள் எத்தனை?**



வினாவிற்கான விடையினைTM<Ans><Name><Dob> எனும் ஒழுங்கில்Type செய்து **772 395 895** எனும் இலக்கத்திற்கு **sms** செய்து கற்கை நெறிக்கட்டணம் ஒன்றில்

**CIMA,DITEC,MCSE 10000 Rs.** வென்றிடுங்கள்

**MCS** யாழ் பல்கலைக்கழகம் அருகில்

Facebook: mcsitcampus

(C/3440)

**கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விருதினை வென்ற நிறுவனம்**

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.